# சிலாங்கூர் இன்று

இலவசம்

SMART SELANGOR

SELANGOR

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2053 / சுபகிருது வருடம் பங்குனி மாதம் / மார்ச் 3 / 2023 March 3 / 2023


## 2025ஆம் ஆண்டுவாக்கில்
# 65,000 வீடுகளை கட்ட
## சிலாங்கூர் அரசு இலக்கு

கோலாலம்பூர்:-

சிலாங்கூர் கூ 3.0 இலக்கின் வாயிலாக வரும் 2025ஆம் ஆண்டுவாக்கில் 65,000 வீடுகளைக் கட்ட சிலாங்கூர் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

இவ்வாண்டு பிப்ரவரி 1ஆம் தேதி வரை சந்தையில் 50,036 வீடுகள் தயாரான நிலையில் வீடுகளை வாங்குவதற்கு 83,603 விண்ணப்பங்கள் கிடைக்கப பெற்றதாக வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸமாயில் கூறினார்.

சிலாங்கூர் மாநில மக்களிடையே கட்டுப்படி விலை வீடுகளுக்கான அடையாளச் சின்னமாக சிலாங்கூர் கூ வீடுகள் விளங்குவதாக கூறிய அவர், இதனால் தயாராகும் வீடுகளைக் காட்டிலும் அவற்றுக்கான விண்ணப்பங்கள் அதிகமாக உள்ளன எனக் குறிப்பிட்டார்.

அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய சொந்த வீட்டைக் கொண்டிருக்க வேண்டும் என ஒவ்வொரு குடும்பத்தின் கனவை நனவாக்குவதற்கு ஏதுவாக 65,000 வீடுகளை நிர்மாணிக்கும் இலக்கை அடைய முடியும் என்று மாநில அரசும் சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை மேம்பாட்டு வாரியமும் நம்புகின்றன என்று அவர் மேலும் சொன்னார்.

ரூமா சிலாங்கூர் கூ திட்டத்தின் வாயிலாக இவ்வாண்டில் 7,500 வீடுகளை நிர்மாணிக்கும் இலக்கை அடைய முடியும் என தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வீடமைப்புத் துறையில் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு ஏதுவாக சிலாங்கூர் கூ வீடமைப்புக் கொள்கை 3.0 சில சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக இங்குள்ள புல்மென் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் கூறினார்.



## 60 வழிபாட்டுத் தலங்கள் வெ.905,000 மானியம் பெற்றன

ஷா ஆலம்:-

இங்குள்ள தாமான் ஸ்ரீமூடா, ஸ்ரீ சுவர்ண ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற மாநில நிலையிலான பொங்கல் விழாவின் போது கிள்ளான்/ஷா ஆலம் வட்டாரத்திலுள்ள 15 இந்து வழிபாட்டுத் தலங்களுக்கு 255,000 வெள்ளி வழங்கப்பட்டது.

இந்த மானியத்திற்கான காசோலைகளை சமூக பொருளாதாரத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் சம்பந்தப்பட்ட வழிபாட்டுத் தலங்களின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தார். இது, இவ்வாண்டிற்கான இரண்டாம் கட்ட நிதியளிப்பு நிகழ்வாக விளங்குகிறது.

தைப்பூசத்தை முன்னிட்டு கடந்த வாரம் பத்துமலைத் திருத்தலத்தில் நடைபெற்ற மாநில நிலையிலான தைப்பூச நிகழ்வின் போது 45 ஆலயங்களுக்கு 650,000 வெள்ளி வழங்கப்பட்டதாக சமூகவியல் பொருளாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.கணபதிராவ் கூறினார்.

இந்த நிதியளிப்பு நிகழ்வு ஆண்டு இறுதி வரை கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்படும் எனக் கூறிய அவர், ஆலயங்களில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் சமய நிகழ்வுகளை நடத்துவதற்கும் உதவுவதில் மாநில அரசு கொண்டுள்ள கடப்பாட்டை இது புலப்படுத்துகிறது என்று அவர் சொன்னார்.

இங்குள்ள தாமான் ஸ்ரீமூடா ஸ்ரீ சுவர்ண மகா மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மாநில நிலையிலான பொங்கல் விழாவுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

**மாநில அரசிடமிருந்து மானியம் பெற்ற வழிபாட்டுத் தலங்களின் பெயர் மற்றும் மானியத் தொகை வருமாறு**

ஷா ஆலம், செக்சன் 19, ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்- வெ.10,000
கிள்ளான், ஜாலான் மேரு, சித்தி விநாயகர் ஆலயம்- வெ.20,000
பண்டமாரான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்- வெ.20,000
ஷா ஆலம், தாமான் ஸ்ரீமூடா ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்- வெ.30,000
கோலக் கிள்ளான், தாமான் கேம், ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்- வெ.10,000
கிள்ளான் நோர்த்ஹம்மக் தோட்டம், ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் மற்றும் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் - வெ.10,000
கிள்ளான், கானட் பிரிட்ஜ், ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் - வெ.20,000
தாமான் செந்தோசா, அனைத்துலக கிருஷ்ணா விழிப்புணர்வு மையம்- வெ.15,000
பண்டமாரான், தேவி காளியம்மாள் ஆலயம்- வெ.10,000
ஸ்ரீ மகா ருத்ர முனீஸ்வரன் ஆலயம்- வெ.20,000
பண்டமாரான், ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில் - வெ. 20,000
கோலக் கிள்ளான், ஸ்ரீ நாகம்மாள் ஆலயம்- வெ.10,000
கிள்ளான், அருள்மிகு ராஜ ராஜ முனீஸ்வரர் ஆலயம்- வெ.20,000
கிள்ளான் ஸ்ரீ பகவதி ஞானாந்தா கிரி வழிபாட்டு மையம்- வெ.20,000

# பி40 இந்தியச் சமூக மாணவர்களுக்கான பொது மற்றும் தனியார் உயர்க்கல்வி நிறுவனக் கட்டண உதவி

ஷா ஆலம்:-

இந்தியச் சமூக மாணவர்களுக்கான பொது மற்றும் தனியார் உயர் கல்வி நிறுவனக் கட்டண உதவிக்கான விண்ணப்பங்கள் முதல் பிப்ரவரி 24 வரை திறந்திருக்கும்.சிலாங்கூர் மாநில அரசாங்க நிலைக்குழு சுவரொட்டி அறிவிப்பின் மூலம் யயாசன் வாரிசான் அனாக் சிலாங்கூர் (YAWAS) இளங்கலை கல்விக்கு RM5,000 மற்றும் டிப்ளோமா கல்விக்கு (அதிகபட்சம் RM3,000 வரை) கட்டண உதவி வழங்குகிறது.

"சிலாங்கூரைச் சேர்ந்த இந்தியர்களுக்கு அதாவது சிலாங்கூரில் பிறந்தவர்கள் அல்லது சிலாங்கூரில் குறைந்தது 15 வருடங்களாக வசிப்பவர்களுக்கு இவ் விண்ணப்பங்கள் திறக்கப்பட்டுள்ளன. "விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மலேசியா முழுவதிலும் உள்ள பொது உயர் கல்வி நிறுவனங்களில் (IPTA) அல்லது தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் (IPTS) படித்துக் கொண்டிருக்க வேண்டும்" என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

பிற தகுதிகள் குடும்ப வருமானம் மாதத்திற்கு RM2,000 மற்றும் அதற்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

"இப்பண உதவி காசோலை




மூலம் வழங்கப்படும் அல்லது உயர்கல்வி நிறுவனங்களின் பொருளாளர் பெயரில் உள்ள கணக்கிற்கு (EFT) பரிமாற்றம் ஆகும்" எனத் தெரிவிக்கப்பட்டது. விண்ணப்பப் படிவங்களை சமூக நலன், ஊழியர்கள் மற்றும் அரசு எஸ்கோ அலுவலகம், மாடி 5, சுல்தான் சலாஹுதீன் அப்துல் அஜீஸ் ஷா கட்டிடத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தகவலுக்கு 03-5544 7307/7305, 017-348 4172 என்ற எண் வழி தொடர்பு கொள்ளலாம் அல்லது staffexco2014@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

### கோல சிலாங்கூர் தைப்பூச நிகழ்வில்

## இலவச மருத்துவ முகாம் உள்ளிட்ட சமூகப் பணிகள்




கோல சிலாங்கூர்:-

சிலாங்கூர் மாநிலத்தில் தைப்பூச விழாவுக்கு பிரசித்தி பெற்ற திருத்தலங்களில் ஒன்றான ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்ற சிலாங்கூர் மாநில அரசு நிலையிலான தைப்பூச நிகழ்வில் மக்களுக்கு பயன் தரக்கூடிய பல்வேறு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த திட்டத்தின் கீழ் தைப்பூசத்தைக் கொண்டாட ஆலயத்திற்கு வரும் கோல சிலாங்கூர் வட்டார மக்களுக்கு இலவச பஸ் சேவை, "செரா சிஹாட்" திட்டத்தின் கீழ் இலவச மருத்துவப் பரிசோதனை, கண் பரிசோதனை மற்றும் ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் இலவச குடிநீர் திட்டத்திற்கான பதிவு நடவடிக்கை ஆகியவை சேவைகள் வழங்கப்பட்டதாக கோல சிலாங்கூர் நகராண்மைக் கழக உறுப்பினர் எம்.சிவபாலன் கூறினார். நேர்த்திக்கடன் செலுத்த ஆலயம் வரும் பக்தர்களின் வசதிக்காக மாநில அரசின் சார்பில் இலவச பஸ் சேவையை நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். நேற்று காலை 7.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை மூன்று பஸ்கள் இந்த சேவையில் ஈடுபட்டன.

புக்கிட் செராக்கா, டேசா கோல்பீல்டு, ஈஜோக், தென்னை மரம் தோட்டம், சுங்கை ரம்பாய் தோட்டம், பெஸ்தாரி ஜெயா ஆகிய பகுதிகளுக்கு இந்த இலவச பஸ் சேவை வழங்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டம் தவிர்த்து செரா சிஹாட் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு இலவச மருத்துவப் பரிசோதனையும் இங்கு மேற்கொள்ளப்பட்டது என்றார் அவர்.

மேலும், வசதி குறைந்த தரப்பினரை இலக்காக கொண்டு இலவச கண் பரிசோதனையும் இங்கு நடத்தப்பட்டது. இந்த பரிசோதனையில் கண் பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு 30 முதல் 40 விழுக்காடு கழிவு தொகையில் மூக்கு கண்ணாடியும் வழங்கப்பட்டது என அவர் சொன்னார்.

இது தவிர, இலவச குடிநீர் திட்டத்திற்கு பதிவு நடவடிக்கையை டீம் சிலாங்கூர் தன்னார்வலர் அமைப்புடன் இணைந்து ஆயர் சிலாங்கூர் நிறுவனம் இங்கு மேற்கொண்டது. மாநில அரசின் இந்த சலுகை திட்டத்தை பலர் அறிந்திராமல் இருப்பதை கருத்தில் கொண்டு இந்த பதிவு நடவடிக்கையை மேற்கொண்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். செரா சிஹாட் திட்டத்தில் சுமார் 300 பேர் பயனடைந்தனர். இலவச பஸ் சேவையை பெற்றவர்களுடன் சேர்த்து மாநில அரசின் திட்டங்கள் வாயிலாக பயனடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டும் என்றார் அவர்.இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கு 10,000 வெள்ளி வரை செலவு பிடித்ததாகவும் அந்த செலவுத் தொகையை கோல சிலாங்கூர் நகராண்மைக் கழகத்தில் இடம் பெற்றுள்ள நான்கு இந்திய கவுன்சிலர்களும் ஏற்றுக் கொண்டதாகவும் அவர் சொன்னார்.

### வர்த்தகத்தில் புதிய வாய்ப்புகளைத் தேட

## இந்திய சமூகத்திற்கு சிறப்பு கடனுவி

### - ஹிஜ்ரா வழங்குகிறது

ஷா ஆலம்:-

இந்தியர்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக "சித்தம்" எனப்படும் இந்திய தொழில் ஆர்வலர் மையத்தின் வாயிலாக சிறப்பு கடனுதவித் திட்டத்தை யாயாசான் ஹிஜ்ரா அறவாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது.

மாநிலத்தின் துரித வளர்ச்சிகேற்ப இந்திய சமூகமும் பொருளாதார ரீதியில் மேம்பாடு காண்பதை உறுதி செய்யும் நோக்கில் இந்த வர்த்தக கடனுதவித் திட்டத்தை மாநில அரசின் அந்த துணை நிறுவனம் அமல்படுத்தியுள்ளது.

சிலாங்கூரிலுள்ள இந்திய சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஹிஜ்ரா அறவாரியம் பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டமாக இந்த சித்தம் கடனுதவித் திட்டம் அமைந்துள்ளது.இந்திய சமூகம் சுய தொழில் மூலம் கூடுதல் வருமானம் பெற்று பொருளாதார ரீதியில் வலுப்பெறுவதை உறுதி செய்வதை இத்திட்டம் இலக்காக



கொள்ளப்பட்டுள்ளதாக ஹிஜ்ரா அறவாரியம் தனது பேஸ்புக் பதிவில் தெரிவித்தது.இந்த கடனுதவித் திட்டம் தொடர்பில் மேல் விபரங்கள் பெற விரும்புவோர் www.hijrahselangor.com என்ற அப்பக்கம் வாயிலாக அல்லது 03-21811585 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். கடந்தாண்டு ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலக்கட்டத்தில் 4,500 தொழில்முனைவோர் 7 கோடி வெள்ளியை ஹிஜ்ரா அறவாரியத்திடமிருந்து வர்த்தக மூலதனக் கடனுதவியாகப் பெற்றனர்.

## இலவச குடிநீர் திட்டத்திற்கு சிலாங்கூர் மக்கள் விண்ணப்பிக்கலாம்



ஷா ஆலம்,:-

மாநிலத்தில் வசிப்பவர்கள் டாருல் ஏசான் நீர் திட்டத்தின் மூலம் மாதத்திற்கு 20 கன மீட்டர் இலவச குடிநீரைப் பெறுவதற்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம்.

இதனை அறிவித்த ஆயர் சிலாங்கூர் சென். பெர்ஹாட் நிறுவனம் ஹறற.யசைளநடயபேடிச.உடிஅ/சநளனைநவேயைட/எமைஅ-யசை-னயசரட-நாளயஉ எனும் அகப்பக்கம் மூலம் இந்த பதிவை மேற்கொள்வதற்கான செயல்முறை காணொளியை தனது டிவிட்டரில் பகிர்ந்துள்ளது.இந்த இலவச குடிநீர் திட்டத்தின் மூலம் மேலும் 100,000 ஆயர் சிலாங்கூர் வாடிக்கையாளர்கள் பயனடைவார்கள் என்றும் இத்திட்டத்திற்கு உண்டாகும் 3 கோடி வெள்ளிக்கும் மேலான செலவை சிலாங்கூர் அரசாங்கம் முழுமையாக ஏற்கும் என்றும் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் அறிவித்திருந்தார்.

கடந்தாண்டு அக்டோபர் மாத நிலவரப்படி 300,000க்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் வேளையில் வரும் 2024 டிசம்பர் 31ஆம் தேதி வரை இந்தத் திட்டத்திற்கான பதிவு நடைபெறுகிறது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த இலவச குடிநீர் திட்டத்தில் பங்கேற்பதற்கான வருமான வரம்பு 4,000 வெள்ளியிலிருந்து 5,000 வெள்ளியாக உயர்த்தப்படுவதாக வும் அமிருடின் குறிப்பிட்டார்.

தகுதித் தேவைகளில் விண்ணப்பதாரர்கள் மலேசிய குடிமக்களாகவும் , தனிப்பட்ட மீட்டர் வகை குடியிருப்பு வளாகங்களில் வசிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும், ஒருவர் ஒரு மீட்டர் கணக்கிற்கு மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.



## பண்டார் செளஜானா புத்ரா மேம்பாலம் டிசம்பர் மாதம் பூர்த்தியாகும்

கோல லங்காட்:–
பண்டார் செளஜானா புத்ரா பகுதியில் நிலவி வரும் போக்குவரத்து பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மேம்பாலம் இந்த வருடம் டிசம்பர் மாதம் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.மொத்தம் 815 மீட்டர் நீளம் கொண்ட இந்த மேம்பாலம் 6 கோடியே 50 லட்சம் வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்படுவதாக அடிப்படை வசதிகள் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

இலிட் எனப்படும் மத்திய சுற்றுவட்டச் சாலை மற்றும் தென் கிள்ளான் விரைவுச் சாலை ஆகியவற்றை இணைக்கும் இந்த மேம்பாலப் பணிகளில் இடையில் ஏற்பட்ட சுணக்கத்திற்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டு விட்டதாக அவர் சொன்னார்.

கோவிட்-19 பெருந்தொற்று காரணமாகக் கடந்த ஈராண்டு காலமாக அந்த மேம்பாலக் கட்டுமானப் பணிகள் தடைபட்டிருந்தன. பின்னர், நீர், மின் இணைப்புகளை இடமாற்றம் மற்றும் நெடுஞ்சாலைத் தரப்பினருடனான ஒத்துழைப்பு ஆகிய விவகாரங்களுக்குத் தீர்வு காணப்பட்டு தற்போது நிர்மாணிப்பு பணிகள் மீண்டும் தொடங்கியுள்ளன என்று அவர்குறிப்பிட்டார்.இரு நெடுஞ்சாலைகளுடன் இணைப்பைக் ஏற்படுத்தக்கூடிய விநோதமான சூழ்நிலை இதற்கு முன்னர் ஏற்பட்டதில்லை. இது பெரும் சிக்கல் நிறைந்த ஒன்றாக விளங்கியது. மேலும் பூமிக்கு அடியில் பதிக்கப்பட்டிருந்த நீர் குழாய்கள் மற்றும் மின் கம்பிகளையும் அகற்ற வேண்டியிருந்தது என்றார் அவர்.இங்குள்ள பண்டார் செளஜானா புத்ரா மேம்பால நிர்மாணிப்பு பகுதிக்கு வருகை புரிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

## சிலாங்கூர் பல்கலைக்கழகம் இலவசக் கல்வி திட்டத்தை வழங்குகிறது

ஷா ஆலம்:–
சிலாங்கூர் பல்கலைக்கழகம் (Unisel) இந்த ஆண்டு ஏப்ரலில் பதியும் புதிய மாணவர்களுக்கு அனைத்து அடிப்படை பாடத்திட்டங்களுக்கும் RM12,000 வரை இலவசக் கல்விக் கட்டணத்தை வழங்குகிறது.

முதல் http://apply.unisel.edu.my என்ற இணைத்தளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று முகநூல் வழி யூனிசெல் தெரிவித்துள்ளது.

“இங்கே அடிப்படை திட்டத்திற்கான கல்வி காலம் ஒரு வருடம் மட்டுமே.




இது மூன்று தவணைகளை உள்ளடக்கியுள்ளது. மேலும், பல்கலைக்கழக வளாகம் பாதுகாப்பு மற்றும் வசதி நிறைந்தவை ஆகும் “மாணவர்கள் தங்கும் விடுதிக்கு மட்டும் RM200 கட்டணம் செலுத்த வேண்டும்,” என்று பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கான பதிவு நாள் 6 ஏப்ரல் 2023 ஆகும். ஏதேனும் கேள்விகள் மற்றும் கூடுதல் தகவலுக்கு, யூனிசெல் அலுவலகத்தை 03-55223400 என்ற எண்ணின் மூலம் தொடர்பு கொள்ளவும். வழங்கப்படும் அடிப்படை பாடத்திட்டங்கள் இங்கே:

• தகவல் தொழில்நுட்ப திட்டம் • மேலாண்மை திட்டம்
• அறிவியல் திட்டம் • இளங்கலை கல்வி திட்டம் (ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்) • இலக்கியத் திட்டம்
• ஹஃப்பாஸ் ட்ராக் (Trek Huffaz) இலக்கியத் திட்டம்
• ஹஃப்பாஸ் ட்ராக் அறிவியல் திட்டம்
• ஹஃப்பாஸ் ட்ராக் மேலாண்மை திட்டம்
• ஹஃப்பாஸ் ட்ராக் தகவல் தொழில்நுட்ப திட்டம்
• ஹஃப்பாஸ் ட்ராக் இளங்கலை கல்வி திட்டம்

## சட்டவிரோத முதலீட்டு நடவடிக்கையில் இன்வெஸ்ட் சிலாங்கூர் ஈடுபடவில்லை




ஷா ஆலம்:–
தங்கள் நிறுவனம், நிறுவனத்தின் பெயர் மற்றும் அதன் தலைமை செயல்முறை அதிகாரி சம்பந்தப்பட்ட எந்த சட்டவிரோத முதலீட்டு நடவடிக்கையிலும் தாங்கள் ஈடுபடவில்லை என்று இன்வெஸ்ட் சிலாங்கூர் பெர்ஹாட் நிறுவனம் தெளிவுடுத்தியுள்ளது.போலியான கணக்குகளில் இயங்கும் டெலிகிராம் செயலி மற்றும் இதர சமூக ஊடகங்களில் இன்வெஸ்ட் சிலாங்கூர் நிறுவனத்தின் பெயர் பயன்படுத்தப்படுவது தங்களின் கவனத்திற்கு வந்துள்ளதாக அது தெரிவித்தது.இத்தகைய எந்தவொரு சமூக ஊடகங்களிலும் இன்வெஸ்ட் சிலாங்கூர் நிறுவனமோ அல்லது அதன் துணை நிறுவனங்களோ ஈடுபடவில்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்த விரும்புகிறோம் என அந்நிறுவனம் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டது. ஆகவே, பொது மக்கள் விழிப்புடன் இருக்கும் அதே வேளையில் எந்தவொரு சட்டவிரோத நிதி முதலீட்டிலும் ஈடுபட வேண்டாம் என அது கேட்டுக் கொண்டது. பொது மக்களைக் குழப்பும் நோக்கில் இத்தகைய சட்டவிரோத முதலீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் தரப்பினர் தங்கள் நிறுவனத்தின் பெயரைப் பயன்டுத்துவதாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது.

## துருக்கி, சிரியா நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு டத்தோ மந்திரி புசார் இரங்கல் தெரிவித்தார்


ஷா ஆலம்:–
துருக்கி மற்றும் சிரியா நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு டத்தோ மந்திரி புசார் தனது இரங்கலைத் தெரிவித்தார்.ஏற்பட்ட பேரழிவை நினைத்து சிலாங்கூர் மக்கள் வருந்துவதாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். “இதில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இரங்கல் தெரிவிக்கப்படுகிறது. துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எனது பிராத்தனைகள் #PrayForTurkiye” என்று அவர் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

தெற்கு துருக்கியில் 7.9 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி அதிகாலை 4.17 மணிக்கு ஏற்பட்டதாகவும், இது பசார்சிக் மாவட்டத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் துருக்கி பேரிடர் மற்றும் அவசர மேலாண்மை ஆணையம் (AFAD) தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன மற்றும் அதன் தாக்கம் லெபனான் மற்றும் சிரியா உள்ளிட்ட அண்டை நாடுகளிலும் உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களைத் தேடுதல் மற்றும் மீட்கும் (SAR) நடவடிக்கைகளுக்கு உதவ மலேசியச் சிறப்பு தேடல் மற்றும் மீட்புக் குழுவைச் (SMART) சேர்ந்த 75 உறுப்பினர்களை மலேசிய அனுப்பியுள்ளது.



## பண்டிகைகள் நட்புறவைப் பலப்படுத்துகின்றன

ஷா ஆலாம்:–
பண்டிகைகளைக் கொண்டாடுவது நட்புறவை வலுப்படுத்துவதுடன் மற்றவர்களின் நலனை விசாரிக்கவும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைகிறது என்று டத்தோ மந்திரி புசார் கூறினார். கடந்த சீனப் புத்தாண்டின் போது கோம்பாக்கைச் சுற்றியுள்ள நெருங்கிய நண்பரின் வீட்டிற்குச் சென்ற போது இந்த விஷயத்தை உணர்ந்ததாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

“கோவிட் -19 தொற்று நோயை எதிர் கொண்ட பிறகு இந்த ஆண்டு மிகவும் அசாதாரணமான உற்சாகத்தை என்னால் உணர முடிகிறது.“எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்பாக இருப்பது மிகவும் நல்லது. இந்த ஒற்றுமை உணர்வை நாம் பேண வேண்டும்,” என்று அவர் முகநூலில் ஒரு வீடியோ மூலம் தெரிவித்தார்.

கடந்த சீனப் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது, உலு கிளாங், கோம்பாக் செத்தியா மற்றும் சுங்கை துவா ஆகிய இடங்களில் உள்ள ஐந்து சீன நண்பர்களின் வீடுகளுக்குத் தான் சென்றதாகக் கூறினார்.அவர்கள் சீனப் புத்தாண்டை கொண்டாடினாலும் மலாய் ஆடைகளை அணிந்திருந்தது தன் கவனத்தை ஈர்த்தது என்று அவர் கூறினார்.



## சுங்கை துவா மாநிலச் சட்ட மன்ற தொகுதி மக்களுக்கு

## ஆபத்து அவசர வேளையில் இலவச போக்குவரத்து சேவை




கோம்பாக்:-
சுங்கை துவா மாநில சட்டமன்றத்தில் வசிப்பவர்களுக்கு இரயில் நிலையங்கள், அரசு நிர்வாக அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனை களுக்குச் செல்ல இலவச மினி போக்குவரத்து சேவையை வழங்குவதாக டத்தோ மந்திரி புசார் அறிவித்தார். இந்தத் திட்டத்தை அமல்படுத்த தனது கட்சி மினி பேருந்துகள், வேன்கள் போன்ற பல வாகனங்களைச் சேகரித்து வருவதாக டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.2023 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டைப் பயன்படுத்த நாங்கள் பாடுபடுவோம், என்று அவர் அங்குள்ள தாமான் ரெயின்ட்ரீ, பத்து கேவ்சில் புதிய ரெயின்ட்ரீ சாலையின் திறப்பு விழாவில் உரையாற்றிய போது இவ்வாறு கூறினார்.
"இந்த மினி வாகனச் சேவை செலாயாங் நகராட்சி கழகம், மாவட்ட மற்றும் நில அலுவலகங்கள், சுகாதார மையங்கள் போன்ற பல முக்கிய நிர்வாக மையங்களுடன் உறவை வலுப்படுத்தும். இந்த மினி வாகனச் சேவை சிலாங்கூர் ஸ்மார்ட் பேருந்து பயன்படுத்தும் பிரதான பாதையில் செல்வது மட்டுமின்றி, பொதுப் பேருந்து சேவை இல்லாதப் பகுதிகளுக்குச் செல்லும் என அமிருடின் மேலும் தெரிவித்தார்.

# "பிளாட்ஸ்" திட்டத்தின் வழி

## 29,271 பேர் பயனடைந்தனர் - மந்திரி புசார்




ஷா ஆலம்:-
பிளாட்ஸ் எனப்படும் பிளாட்பார்ம் சிலாங்கூர் திட்டம் கடந்த 2020ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது முதல் இதுவரை 20,271 வணிகர்கள் பயனடைந்துள்ளனர்.சிலாங்கூரிலுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினரை குறிப்பாக சிறு மற்றும் சில்லறை வியாபாரிகளை பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்கான ஊக்குவிப்பு மற்றும் தகவல் தளமாக இந்த பிளாட்பார்ம் சிலாங்கூர் விளங்குகிறது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.இந்த பிளாட்ஸ் திட்டம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 20,271 பேர் பயனடைந்துள்ளனர். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் வர்த்தகத்தை இரட்டிப்பாக்குவதற்கும் இந்த இந்த திட்டம் பெரிதும் துணை புரிகிறது என்று அவர் மேலும் சொன்னார்.இந்த வளர்ச்சி இத்திட்டத்தின் ஆக்கத்தன்மையை பிரதிபலிப்பதாக உள்ளது. இதன் மூலம் மாநிலத்தின் இலக்கவியல்மய திட்டமும் விரிவாக்கம் காண்கிறது என அவர் தெரிவித்தார்.நோன்பு பெருநாளின் போது மட்டுமின்றி எல்லா காலங்களிலும் வணிகர்கள் வருமானத்தைப் பெற உதவும் நோக்கில் இந்த பிளாட்ஸ் 2.0 திட்டத்தை மாநில அரசு கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் தேதி தொடக்கியது.

## சுங்கை துவா மாநிலச் சட்டமன்றம் பள்ளிகளுடன் இணைந்து

### பள்ளிக்கு திரும்பும் நிதி உதவியைச் செயல்படுத்தும்

ஷா ஆலம்:-
சுங்கை துவா மாநிலச் சட்டமன்றச் (DUN) சேவை மையம், சிலாங்கூர் மந்திரி புசார் (கட்டமைப்பு) அல்லது எம்பிஐ ஏற்பாடு செய்த உதவிகளை, செயல்படுத்த பள்ளிகளுடன் இணைந்து செயல்படும்.டத்தோ மந்திரி புசார் அரசியல் செயலாளர் ஏ ரஹீம் காஸ்டி, "மீண்டும் பள்ளிக்கு செல்வோம்" உதவி திட்டத்தால் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் (B40) RM100 மதிப்புள்ள நன்கொடைகளை பெறுவதை உறுதி செய்ய முடியும் என்றார்.



"இலக்குக் குழுவை அடைய எங்களுக்கு உதவி தேவை. மேலும், சிரமப்படும் மாணவர்களுக்கு உதவுதல் உறுதி செய்வதற்காக, கிராமத் தலைவர்கள் மற்றும் நகராண்மை கழக உறுப்பினர்களிடமிருந்து பெறும் மாணவர்களின் தகவல்களையும் நாங்கள் ஆய்வு செய்கிறோம்.
"இதுவரை, நாங்கள் தகுதியான 300 மாணவர்களை அடையாளம் கண்டுள்ளோம். மார்ச் மாதம் பள்ளி திறக்கும் முன் அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய இம்மாத இறுதியில் நிதி உதவி வழங்கப்படும், என்று அவர் சிலாங்கூர்கினியிடம் கூறினார்.
இந்த ஆண்டு, பள்ளித் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் B40 குடும்பங்களின் சுமையைக் குறைக்க ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றத்துக்கும் எம்பிஐ RM30,000 ஒதுக்கீடு வழங்குகிறது.
கடந்த வாரம், சுங்கை துவாவின் பிரதிநிதியான டத்தோ மந்திரி புசார், 2016 இல் பிறந்த குழந்தைகளுக்குத் தாபோங் வாரிசான் அனாக் சிலாங்கூர் (தவாஸ்) திட்டத்தின் மூலம் 1,212 உறுப்பினர்களுக்கு ஆரம்பப் பள்ளிக்கான உதவியை வழங்கினார்.

# சிறு, நடுத்தர தொழில் முனைவோரின் பொருட்களை சந்தைப்படுத்த மாநில அரசு உதவி




ஷா ஆலம்:-
சிலாங்கூர் மாநில அரசு #produkkampung4u எனும் "கிராமம் நோக்கி நாம்" திட்டத்தின் கீழ் சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்வதற்கான திட்டத்தை வகுத்துள்ளது.
கொள்முதல் செய்யப்படும் அப்பொருள்கள் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பைச் சேர்ந்த உதவி தேவைப்படும் தரப்பினருக்கு வழங்கப்படும் என்று கிராம மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் போர்ஹான் அமான் ஷா கூறினார்.சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு உதவும் அதேவேளையில் அவர்களின் உற்பத்தி பொருட்கள் பிரபலப்படுத்தும் நோக்கில் "கிராமம் நோக்கி நாம்" எனும் இந்த திட்டத்தை தாங்கள் அறிமுகப் படுத்தியுள்ளதாக அவர் சொன்னார்.
வாங்கப்படும் அந்த பொருட்கள் தேவைப்படும் தரப்பினருக்கு குறிப்பாக சிலாங்கூரில் உள்ள பாரம்பரிய கிராமங்களை சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று அவர் தனது பேஸ்புக் பதிவில் கூறினார்.
இந்த திட்டத்தை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இங்குள்ள சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா கட்டிடத்தில் அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தார்.

## மாநில அரசின் மலிவு விற்பனைஇரண்டே வாரங்களில்
# வெ.14 லட்சம் மதிப்பிலான வர்த்தகம் பதிவு

அம்பாங்:-

சிலாங்கூர் மாநில அரசின் ஜெலாஜா ஏசான் ராக்யாட் (ஜே.இ.ஆர்.) 2.0 திட்டம் தொடங்கப்பட்ட இரண்டு வார காலத்தில் 14 லட்சம் வெள்ளி மதிப்புள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த மாதம் 15ஆம் தேதி தொடங்கி மாநிலத்தின் 100க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்ட இந்த விற்பனையின் வழி பொது மக்கள் 400,000 வெள்ளிக்கும் மேல் மிச்சப்படுத்துவதற்குரிய வாய்ப்பு கிட்டியதாக அடிப்படை விவசாய தொழில்துறை ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் ஹஷிம் கூறினார்.உதவித் தொகை உள்பட சுமார் 1 கோடியே 20 லட்சம்



வெள்ளியை நாம் செலவிட்டதன் மூலம் சந்தையை விட 30 விழுக்காடு குறைவான விலையில் பொது மக்களுக்கு உணவுப் பொருட்களை விற்பதற்குரிய வாய்ப்பு கிட்டியது என்றார் அவர்.

சிலாங்கூர் மாநில விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டிலான இந்த விற்பனை கடந்தாண்டில் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது. அதன் அடிப்படையில் தினசரி ஒன்பது இடங்களில் வாரத்தின் ஆறு நாட்கள் இந்த விற்பனையை நடத்துகிறோம். கடந்த இரு வாரங்களில் மட்டும் 14 லட்சம் வெள்ளி மதிப்புள்ள பொருட்கள் இத்திட்டத்தின் வழி விற்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் சொன்னார்.

இங்குள்ள தாமான் நிர்வாணாவில் இந்த அத்தியாவசியப் பொருள் மலிவு விற்பனையை தொடக்க வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

## "சிப்ஸ்" மாநாட்டிற்கு அமோக வரவேற்பு கண்காட்சி இடத்தை
# விரிவாக்கம் செய்ய மாநில அரசு திட்டம்

ஷா ஆலம்:-

முந்தைய ஆண்டுகளை விட இவ்வாண்டில் கிடைத்துள்ள அமோக ஆதரவின் அடிப்படையில் வருடாந்திர அனைத்துலக கண்காட்சி இடத்தை விரிவாக்கம் செய்வது குறித்து சிலாங்கூர் அரசு பரிசீலித்து வருகிறது. "சிப்ஸ்" எனப்படும் சிலாங்கூர் அனைத்துலக வர்த்தக மாநாட்டில் பங்கு பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு அந்த மாநாடு நடைபெறும் கோலாலம்பூர் மாநாட்டு மையம் தவிர்த்து அருகிலுள்ள ஹோட்டல்களையும் பயன்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாம் கிம் கூறினார்.டிரேடர்ஸ் ஹோட்டல் மற்றும் கிராண்ட் ஹையாத் ஹோட்டல் ஆகியவை இந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று அவர் சொன்னார்.கடந்தாண்டு இந்த மாநாட்டிற்கு கிடைத்த ஆதரவின் அடிப்படையில் இம்முறையும் சிறப்பான வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். ஆகவே, கூடுதல் இடங்களை குறிப்பாக மாநாட்டு மையத்திற்கு அருகிலுள்ள ஹோட்டல்களை இம்மாநாட்டின் போது பயன்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றார் அவர். மாநாடுகளும் இதர அங்கங்களும் ஹோட்டல்களில் நடைபெறும் வேளையில் கண்காட்சியை நடத்துவதற்கு மாநாட்டு மையம் பயன்படுத்தப்படும். எனினும், இதன் தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது என்று சிலாங்கூர் கினியிடம் அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டு அக்டோபர் 6 முதல் 9 வரை கோலாலம்பூர் மாநாட்டு மையத்தில் நடைபெற்ற சிப்ஸ் 2022 அனைத்துலக வர்த்தக மாநாட்டில் 145 கோடி வெள்ளி மதிப்பிலான வர்த்தக பரிவர்த்தனை வாய்ப்புகள் பதிவு செய்யப்பட்டன. இந்த மாநாட்டில் 35 கோடி வெள்ளி வர்த்தக பரிவர்த்தனை வாய்ப்புகளை பதிவு செய்ய முன்னதாக இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்தது என்பது குறிப்பிடதக்கது.

# குளத்திலிருந்து நீர் ஆதாரங்களைப் பெறுவதற்கு
## சிறப்பு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்- இஷாம் ஹஷிம்

ஷா ஆலம்:-

சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயா ஆகிய பகுதிகளுக்கு குளத்து நீரை முறையாக கொண்டுச் செல்வதற்கு ஏதுவாக நீர் மூல ஆதார உத்தரவாதத் திட்டத்தின் கீழ் சிறப்பு அடிப்படை வசதிகளை சிலாங்கூர் அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த முன்னெடுப்பின் வாயிலாக நீரின் தரப் பிரச்னைக்குத் தீர்வு காணவும் நீரின் அளவை அதிகரிக்கவும் இயலும் என்று அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார். இந்த நோக்கத்திற்காக சுங்கை சிலாங்கூரில் மணிக்கு 3,000 லிட்டர் நீரை வெளியேற்றும் சக்தி கொண்ட பம்ப் சாதனங்கள், கச்சா நீர் குழாய், நீர் இறைப்பு பம்ப் நிலையம் மற்றும் தானியங்கி முறையில் செயல்படக் கூடிய மதகு ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அவர் சொன்னார்.

மூன்று மாநிலங்களுக்கும் நீண்டகால அடிப்படையில் நீர் உத்தரவாதத்தை வழங்கக்கூடிய அத்திட்டம் இவ்வாண்டு இறுதியில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.இந்த திட்டத்தை அமல்படுத்துவது மூலம் நீர் மாசுபாடு பிரச்னைக்குத் தீர்வு காணவும் ஆற்றின் தொடக்கம் முதல் இறுதி வரையிலான பகுதிகளில் காணப்படும் நீர் பற்றாக்குறை பிரச்னையைக் களையவும் முடியும் என்று அவர் சொன்னார்.



## இவ்வாண்டு சிலாங்கூர் வான் கண்காட்சியில்
# அதிக நிறுவனங்கள் பங்கேற்கும்
## -டத்தோ தெங் நம்பிக்கை

ஷா ஆலம்:-

சிலாங்கூர் அரசின் ஏற்பாட்டில் இவ்வாண்டு நடைபெறவுள்ள வான் கண்காட்சியில் (எஸ்.ஏ.எஸ்.) அதிக விமான நிறுவனங்கள் பங்கேற்கும் என்பதோடு வருகையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் அதிகமான விமானங்களை காட்சிக்கு வைப்பதற்கு ஏதுவாக பெரிய இடம் தேவைப்படும என்று முதலீட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து வரும் வருகையாளர்களின் வசதிக்காக சிறப்பான ஏற்பாடுகளைச் செய்ய தமது தரப்பு முயன்று வருவதாக அவர் சொன்னார்.

மூன்றாவது முறையாக நடத்தப்படும் இந்த கண்காட்சியை ஸ்கைபார்க் வட்டார வான் போக்குவரத்து மையத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது. கடந்த இரு முறை நடத்தப்பட்டதைக் காட்டிலும் இம்முறை விமானக் கண்காட்சிக்கு கூடுதல் இடம் ஒதுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த கண்காட்சியை நடத்துவதற்கு பெரிய அளவிலான இடம் தேவைப்படும் நிலையில் குறிப்பிட்ட அளவிலான இடம் மட்டுமே உள்ளது. எனினும், இப்பிரச்னையை சமாளிக்க முடியும் என நம்புகிறோம். அதிக எண்ணிக்கையிலான விமானங்கள் இந்த கண்காட்சியில் இடம் பெறும் என எதிர்பார்க்கிறோம் என்றார் அவர்.

கடந்த 2021ஆம் ஆண்டில் சிலாங்கூர் முதன் முறையாக வான் போக்குவரத்து கண்காட்சியை ஏற்று நடத்தியது. வான் போக்குவரத்து துறையின் வளர்ச்சிக்கு உதவும் அதேவேளையில் இத்துறையில் உள்நாட்டு நிறுவனங்களும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறையினரும் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது.



# சிலாங்கூர் அரசின் ஏற்பாட்டில் உல்லாசக் கப்பல் விழா

## – மார்ச் மாதம் நடைபெறும்



ஷா ஆலம்:-
சிலாங்கூர் மாநில அரசின் ஏற்பாட்டில் முதன் முறையாக உல்லாசக் கப்பல் விழா 2023 கோலக் கிள்ளான் உல்லாசக் கப்பல் முனையத்தில் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. இவ்வாண்டின் முதல் காலாண்டில் சுற்றுலா நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் டூரிசம் சிலாங்கூர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வாக இது விளங்குகிறது என்று சுற்றுலாத் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.

இந்த உல்லாச கப்பல் விழாவையொட்டி கிள்ளான் துறைமுகத்திற்கு வரவிருக்கும் சீபோர்ன் என்கோர் 211, மெய்ன் ஷிப் 5, ஸ்பெக்ட்ரம் ஆஃப் சீ 324 மற்றும் சில்வர் ஷேடோவ் 186 ஆகிய உல்லாசக் கப்பல்களை சுற்றிப் பார்ப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் சொன்னார்.

இது தவிர, வாகன உணவு விற்பனை, சிலாங்கூர் சுற்றுலா மையங்கள் தொடர்பான கண்காட்சி மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் புளோரிடாவில் வரும் மார்ச் மாதம் 27 முதல் 30 வரை நடைபெறும் சீட்ரேட் க்ரூஸ் குளோபால் கான்வென்ஷன் 2023 மாநாட்டிலும் டூரிசம் சிலாங்கூர் கலந்து கொள்ளும் என அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூரை உல்லாசக் கப்பல்களின் மையமாக பிரபலப்படுத்தும் முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் அவர். உள்நாட்டு சுற்றுலாவை ஊக்குவிக்கும் நோக்கில் மார்ச் மாதம் 17 முதல் 19 வரை நடைபெறும் மாட்டா கண்காட்சியிலும் டூரிசம் சிலாங்கூர் பங்கேற்கும் என்றும் அவர் கூறினார்.

# காஜாங் தொகுதியில்

## அடிப்படை வசதிகளை மேம்படுத்த

## வெ.500,000 ஒதுக்கீடு பயன்படுத்தப்படும்

உலு லங்காட்:-
சிலாங்கூர் பென்யாயாங் 2.0 திட்டத்தில் பழுதடைந்த மற்றும் நீண்ட காலமாக சீர் செய்யப்படாத அடிப்படை வசதிகளுக்கு காஜாங் சட்டமன்றத் தொகுதி முன்னுரிமை அளிக்கும்.

மாநில சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட தொகுதிகளுக்கான அந்த 500,000 வெள்ளி ஒதுக்கீட்டை கொண்டு இந்த பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகளை தரம் உயர்த்தும் பணி தொடங்கப்படும் என்று அதன் சட்டமன்ற உறுப்பினர் ஹீ லோய் சியான் கூறினார்.



நீண்ட காலமாக சீர் செய்யப்படாமல் இருக்கும் அடிப்படை வசதிகளோடு சாலைகளைச் செப்பனிடுவது மற்றும் பள்ளிகளில் கூரைகளை சரி செய்வது போன்ற பணிகளை வரும் பிப்ரவரி மாதம் தொடங்கி மூன்று மாதங்களுக்கு மேற்கொள்ளவுள்ளோம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தில் மலிவு விலை அடுக்குமாடி வீடுகளுக்கும் நாங்கள் முன்னுரிமை அளிக்க உள்ளோம். சில குடியிருப்பு பகுதிகளில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வர்ணம் பூச படவில்லை என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம் என்றார் அவர். நேற்றிரவு இங்கு நடைபெற்ற காஜாங் சாப் கோய் மேய் கலாசார மற்றும் பாரம்பரிய நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

சிலாங்கூர் பென்யாயாங் திட்டத்தின் முதல் கட்டத்தில் ஒதுக்கப்பட்ட பத்து லட்சம் வெள்ளி மானியத்தில் தொடங்கப்பட்ட சில திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஹீ லோய் சியான் குறிப்பிட்டார்.பொது மக்களுக்கு பயன் தரக்கூடிய சிறு திட்டங்களை அமல் செய்வதன் மூலம் வட்டார பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டும் நோக்கில் சிலாங்கூர் பென்யாயாங் திட்ட அமலாக்கத்திற்காக மாநில அரசு 2 கோடியே 80 லட்சம் வெள்ளியை ஒதுக்கீடு செய்தது. இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 500,000 வெள்ளி மானியம் வழங்கப்பட்டது.

# பொது போக்குவரத்து பயன்பாட்டை அதிகரிக்க ரவாங் கே.டி.எம். நிலையத்தில்

## 400 வாகன நிறுத்துமிடங்கள்

ஷா ஆலம்:-
ரவாங் நகரில் நிலவி வரும் வாகன நெரிசல் பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் ரவாங் கே.டி.எம். இரயில் நிலையம் அருகே மேற்கொள்ளப்படும் அடுக்குமாடி வாகன கார் நிறுத்துமிட கட்டுமானப் பணிகள் வரும் 2026ஆம் ஆண்டு முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்த கார் நிறுத்துமிடத்தை நிர்மாணிப்பதன் மூலம் இந்த நகரில் கடந்த 30 ஆண்டுகளாக நிலவி வரும் வாகன நெரிசல் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்று ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார்.சுமார் 54 லட்சம் வெள்ளி செலவிலான இந்த ஐந்து மாடி கார் நிறுத்துமிடக் கட்டிடப் பணிகள் கடந்தாண்டு தொடங்கப்பட்டதாக அவர் சொன்னார்.

ரவாங் நகரில் போக்குவரத்து நெரிசல் பிரச்சனை 30 முதல் 40 ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பட்டு விட்டது. ரவாங் கே.டி.எம். நிலையத்தில் போதுமான கார் நிறுத்துமிடங்கள் இல்லாதக் காரணத்தால் பிற வாகனங்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் வாகனங்களை நிறுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது என்று அவர் தெரிவித்தார். புதிதாக நிர்மாணிக்கப்படும் இந்த அடுக்குமாடி கார் நிறுத்துமிடக் கட்டிடம் இந்த பிரச்சனைக்குத் தீர்வினை ஏற்படுத்தும் என்பதோடு கே.டி.எம்.சேவையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையையும் அதிகரிக்க உதவும் என்று சுவா சொன்னார்.

இந்த புதிய கார் நிறுத்துமிடக் கட்டிடத்தில் 437 கார் நிறுத்துமிடங்களும் 128 மோட்டார் சைக்கிள் நிறுத்துமிடங்களும் உள்ளதாக அவர் தனது டிக்டாக் செயலி வழி வெளியிட்ட காணொளியில் குறிப்பிட்டார்.

இந்த கட்டடத்தில் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்துமிடங்கள் தவிர்த்து பஸ்களும் டாக்சிகளும் பயணிகளை இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் வசதிகள் உள்ளதாக கூறப்படுகிறது. இது தவிர, இந்த கட்டிடம் கழிப்பறை, லிஃப்ட், நடைபாதை, கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட வசதிகளையும் கொண்டுள்ளது.

# பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் அத்துமீறிய இ.சி.ஆர்.எல். தரப்பினருக்கு பணி நிறுத்த உத்தரவு

## மந்திரி புசார் தகவல்

பெட்டாலிங் ஜெயா:-
கோம்பாக் மற்றும் செரெண்டாவில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் அத்துமீறல் நடந்துள்ளதாக கூறப்படும் சம்பவம் இ.சி.ஆர்.எல். எனப்படும் கிழக்குக் கரை இரயில் தண்டவாளத் திட்டத்தின் மேம்பாட்டு ப் பணியின் ஒரு பகுதியாகும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி விளக்கமளித்துள்ளார். எனினும், அந்த திட்டப் பகுதிக்குச் செல்வதற்காக சாலை அமைக்கும் பணியை சம்பந்தப்பட்டத் தரப்பினர் அனுமதியின்றி மேற்கொண்டதால் பிரச்னை எழுந்ததாக அவர் சொன்னார்.இ.சி.ஆர்.எல். திட்டத்தின் ஒரு பகுதியாக கோம்பாக் முதல் செரெண்டா வரையில் அமைக்கப்படும் சுரங்கப் பாதைக்காக அப்பகுதியில் தற்காலிகமாக பாதை போடப்பட்டுள்ளது. அப்போது இதற்கான அனுமதி பெறப்படவில்லை என்பதுதான் இதில் உள்ள பிரச்னையாகும் என அவர் கூறினார். இந்த அத்துமீறல் நடவடிக்கை கடந்தாண்டு டிசம்பர் மாதம் நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்து இவ்விகாரத்திற்கு தீர்வு காணப்பட்டு விட்டது. இதன் தொடர்பில் வெளியிடப்பட்ட படம் பழையதாக இருக்கலாம் அல்லது ஏற்கனவே அமைக்கப் பட்ட அந்த பாதையின் தோற்றத்தை சித்தரிப்பதாக இருக்கலாம் என அவர் சொன்னார்.

கடந்தாண்டு இறுதியிலும் இவ்வாண்டு தொடக்கத்திலும் உலு கோம்பாக் மற்றும் செரெண்டா பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் சட்டவிரோத வெட்டுமர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக ரிம்பா டிஸ்குளோஷர் புரோஜெக்ட் எனும் அரசு சாரா அமைப்பு சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பில் அவர் இவ்வாறு கருத்துரைத்தார். கிளந்தான், திரங்கானு, பகாங், சிலாங்கூர் ஆகிய நான்கு மாநிலங்களை உள்ளடக்கிய 665 கிலோமீட்டர் நீளம் கொண்ட இந்த இ.சி.ஆர்.எல். திட்டத்தில் 59 சுரங்கப் பாதைகள் அமைக்கப்படுகின்றன. சிலாங்கூர் மாநிலத்தில் கோம்பாக், உலு சிலாங்கூர், கோல சிலாங்கூர், கிள்ளான் ஆகிய நான்கு மாவட்டங்கள் வழியாக 90.72 கிலோ மீட்டர் தொலைவுக்கு இந்த இரயில் தடம் அமைக்கப்படுகிறது. இத்திட்டத்தில் 32 லாட் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் உள்ளடங்கியுள்ளன.



## இலவசக் காப்பறுதி திட்டதில் மக்களைப் பதிவு செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் தீவிர நடவடிக்கை

ஷா ஆலம்:- சிலாங்கூர் அரசின் இலவசக் காப்புறுதித் திட்டத்தில் (இன்சான்) பொது மக்கள் விரைந்து பதிவதை உறுதி செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பெர்மாத்தாங் தொகுதியில் சுமார் 2,000 பேர் இந்த திட்டத்தில் பதிவதற்குத் தாங்கள் உதவி புரிந்துள்ளதாகத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ரோஸானா ஜைனால் அபிடின் கூறினார். இந்த திட்டத்திற்கான பதிவு இணையம் வாயிலாக மேற்கொள்ளப்படுவதால்




இந்நடவடிக்கையில் பொது மக்களுக்கு தாங்கள் தேவையான உதவிகளை நல்கி வருவதாக அவர் சொன்னார்.

இந்த இலவசக் காப்புறுதி திட்டம் தொடர்பில் சமூக ஊடகங்கள் வாயிலாக பொது மக்களுக்குத் தெரிவிக்கும் வேளையில் ஜெலாஜா ஏசான் ராக்யாட் மலிவு விற்பனை, தாவாஸ் நிதி வழங்கும் நிகழ்வு போன்ற பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களிலும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த இலவசக் காப்புறுதி திட்டத்திற்குப் பொது மக்கள் மத்தியில் நல்ல ஆதரவு இருந்த போதிலும் இன்னும் பலர் இத்திட்டத்தில் இன்னும் பதியாமலிருப்பதாக மேரு சட்டமன்ற உறுப்பினர் முகமது ஃபாக்ருள்ராஸி மொக்தார் தெரிவித்தார்.

தொகுதி சேவை மையத்தின் வாயிலாகப் பொது மக்களை இத்திட்டத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம். இதன் தொடர்பில் உதவி பெற மக்கள் இன்று வரை எங்கள் சேவை அலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளனர் என்றார் அவர்.

இந்த இலவச காப்புறுதித் திட்டத்தை பொது மக்களிடம் கொண்டுச் செல்வதற்குக் கடிதங்கள் மற்றும் பதாகைகள் தாங்கள் பயன்டுத்தி வருவதாக கம்போங் துங்கு சட்டமன்ற உறுப்பினர் லிம் யீ வேய் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்தில் பலர் சொந்தமாக பதிவு செய்துள்ளனர். இருந்த போதிலும் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம் என்றார் அவர்.

மாநிலத்திலுள்ள 60 லட்சம் பேர் பயன்பெறும் வகையில் இந்த இலவசக் காப்புறுதித் திட்டத்தை மாநில அரசு தொடக்கியுள்ளது. பிறந்து 30 நாள் ஆன குழந்தை முதல் 80 வயது முதியோர் வரை பங்கு பெற வகை செய்யும் இந்த குழு காப்புறுதி திட்டத்திற்கு உண்டாகும் செலவுத் தொகையை மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது.

## இளைஞர்களுக்காகப் பல திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன



அம்பாங் ஜெயா:- உலு கிளாங் மாநிலச் சட்டமன்றத்தின் (DUN) முக்கிய நிகழ்ச்சிகள் இளைஞர்களை உள்ளடக்கிய திட்டங்களாக இருக்கும்.சமூகச் சேவை மையத்தின் மேலாளர் கூறுகையில், இளைஞர்களை உள்ளடக்கிய தன்னார்வலர்கள் குழுவை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்.''மேலும், விளையாட்டுப் போட்டிகள், இ-ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்வதைக் குறித்து விவாதிக்க உள்ளூர் இளைஞர் சமூகத்தைச் சந்திப்போம்.மக்கள் பிரதிநிதிகளின் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி விளையாட்டு வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளைச் சரிசெய்வதிலும் கவனம் செலுத்துவோம் என்று முகமட் ஹெல்மிசான் அப்துல் கரீம் கூறினார். இதற்கிடையில், பிரிவி 2இன் கவுன்சிலர் அன்வால் சாரி கூறுகையில், இளைஞர்களின் ஈடுபாட்டைக் கவரும் வகையில் விளையாட்டு நடவடிக்கைகள் அல்லது திட்டங்களை அதிகரிப்பதில் தனது தரப்பு கவனம் செலுத்துகிறது.

''உலு கிளாங் மாநிலச் சட்டமன்றத்தின் சிலாங்கூர் இளைஞர்களுடன் இணைந்து இலவசக் கருப்பு எண்ணெய் மாற்றும் திட்டத்தை நாங்கள் ஏற்பாடு செய்தோம்,'' என்று அவர் குறிப்பிட்டார்.

## சுமார் 500 பேர் ஷாப்பிங் வவுச்சர்களைப் பெறுவர் (SMUE)
# கம்போங் துங்கு மாநிலச் சட்டமன்றம்

ஷா ஆலம்:- கம்போங் துங்கு மாநிலச் சட்டமன்றத்தில் (DUN) வசிக்கும் சுமார் 500 பேர் ஸ்கிம் மஸ்ர உசிய எமாஸ் (SMUE) ஷாப்பிங் வவுச்சர்களை இன்று முதல் பெறுவார்கள்.முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான வவுச்சர்கள் (OKU) பெட்டாலிங் ஜெயாவின் தாமான் பாரமவுண்டில் உள்ள கம்போங் துங்கு மாநிலச் சட்டமன்ற சமூகச் சேவை மையத்தில் வழங்கப்படும்



என்று பிரதிநிதி லிம் யி வெய் தெரிவித்தார். ''ஜனவரி மற்றும் பிப்ரவரியில் பிறந்த நாள் கொண்டாடும் உறுப்பினர்களுக்கு ஜோம் ஷாப்பிங் வவுச்சர்கள் வழங்கப்படும்,'' என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது. குறுந்தகவல் (எஸ்எம்எஸ்) மூலம் அழைப்பிதழைப் பெற்றவர்கள் வரும் வியாழக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.''பெறுநர் அடையாளச் சான்றாக அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்''. ஜோம் ஷாப்பிங் வவுச்சர் பெறுபவர்களுக்கான குடும்ப வருமானத் தகுதி இந்த ஆண்டு முதல் மாதத்திற்கு RM2,000 லிருந்து RM3,000 ஆக உயர்த்தப்படும் என்று மாநில அரசு முன்பு அறிவித்தது. மேலும், பெறுநர்கள் RM150 மதிப்புமிக்க ஷாப்பிங் வவுச்சர் மற்றும் RM500 இறப்புப் பலனைப் பெறுவார்.

# ஜோம் ஷாப்பிங் வவுச்சர்களைப் பெற 4,622 மூத்தக் குடிமக்கள்
## மற்றும் ஊனமுற்றோர் கோலக் குபு பாரு மாநிலச் சட்டமன்றம் தகுதி பெற்றுள்ளனர்

ஷா ஆலம்:- கோலக் குபு பாரு மாநிலச் சட்டமன்றத்தில் (DUN) மொத்தம் 4,622 மூத்தக் குடிமக்கள் மற்றும் ஊனமுற்றோர் (OKU) RM150 மதிப்புள்ள ஜோம் ஷாப்பிங் வவுச்சர்களை ஸ்கிம் மெஸ்ர உசிய எமாஸ் திட்டத்தின் கீழ் பெறத் தகுதி பெற்றுள்ளனர். அதன் பிரதிநிதி லீ கீ ஹியோங் கூறுகையில், கடந்த ஜனவரி முதல், அவரது தரப்பு 2,826 வவுச்சர்கள் வழங்கியுள்ளது. ''இந்த ஆண்டு, "SMUE" பங்கேற்பாளர்களின் பிறந்த மாதத்தின் அடிப்படையில் வவுச்சர்கள் வழங்க மாட்டோம், மாறாக பெறுநர்கள் எந்நேரத்திலும் தங்கள் வவுச்சர்களைக் கோலக் குபு பாரு மாநிலச் சட்டமன்றத்தின் சமூகச் சேவை மையத்தில் பெற்றுக்கொள்ளலாம்,'' என்றார்.''இன்னும் வவுச்சர்களை பெற்றுக் கொள்ளாத முதியவர்கள் அல்லது மாற்றுத்திறனாளிகள் தங்கள் அடையாள அட்டையை எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்கு வரலாம்'' என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஜோம் ஷாப்பிங் வவுச்சர் பெறுபவர்களுக்கான குடும்ப வருமான தகுதி இந்த ஆண்டு முதல் மாதத்திற்கு RM2,000 லிருந்து RM3,000 ஆக உயர்த்தப்படும் என்று மாநில அரசு அறிவித்தது.



# தனிநபர் வருமான வரி குறைப்பு

தனிநபர் வருமான வரி குறைக்கப்படும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார். எம்40 எனப்படும் நடுத்தர வருமானம் பெறும் தரப்பினருக்கான வருமான வரி விகிதாச்சாரத்தை குறைப்பதன் மூலம் அவர்களின் வருமானம் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என அவர் சொன்னார்.இந்த வரி குறைப்பின் மூலம் சுமார் 24 லட்சம் பேர் பயனடைவர் எனக் கூறிய அவர், 1,300 வெள்ளி வரை அவர்கள் இதன் மூலம் அனுகூலம் பெற முடியும் என்றார்.



## ஊக்குவிப்புத் திட்டத்திற்கு சொக்சோ வெ.4.5 கோடி ஒதுக்கீடு

திவேட் திட்டத்திற்கு 17,000 பட்டதாரிகளை வேலைக்கமர்த்தல், அதற்கு, முதலாளிகளுக்கு ஊக்கத் தொகையாக 4 கோடியே 50 லட்சம் வெள்ளியைச் சொக்சோ எனப்படும் சமூகப் பாதுகாப்பு நிறுவனம் ஒதுக்கியுள்ளது. அந்த பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளம் போக, உபரியாக மூன்று மாத காலத்திற்கு தலா 600 வெள்ளியை வழங்க இந்த ஒதுக்கீடு பயன்படும். இது தவிர, மாற்றுத்திறனாளிகள், முன்னாள் கைதிகள், குடும்பத்தால் கைவிடப்பட்டவர்கள், வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் முதலாளிகளுக்கு மாதம் 600 வெள்ளி வீதம் மூன்று மாதங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் சொக்சோ கொண்டுள்ளது. திறன் வளர்ப்பு திட்டங்களில் பங்கு கொள்ளும் கிக் எனப்படும் தற்காலிக அல்லது பகுதி நேர தொழில் புரிவோருக்கு மாதம் 300 வெள்ளி வீதம் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்.

## ரஹ்மா திட்டம் விரிவாக்கப்படும் பட்ஜெட்டில் அறிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு ஒற்றுமை அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள ரஹ்மா எனும் கருணைத் திட்டம் விரிவாக்கம் காணவுள்ளது.இந்த திட்டத்திற்கு ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் தலா 10 கோடி வெள்ளி ஒதுக்கப்படும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். இந்த திட்டத்தின் கீழ் அத்தியாவசிய உணவுப் பொருட்களை சந்தையை விட 30 விழுக்காடு குறைவான விலையில் வாங்குவதற்குரிய வாய்ப்பு பொது மக்களுக்கு கிட்டும் என்று அவர் தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த போது அவர் இதனைச் சொன்னார்.

## மோட்டார் சைக்கிள், பயணிகள் வாகன லைசென்ஸ் சோதனைக் கட்டணம் ரத்து

டாக்சி, பஸ், இ-ஹெய்லிங் எனப்படும் மின் அழைப்பு வாடகைக் கார் சேவை மற்றும் பி2 பிரிவு மோட்டார் சைக்கிள் சோதனைக் கட்டணத்தை அரசாங்கம் ரத்து செய்துள்ளது. இதற்கான கட்டணங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்று பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது அறிவித்தார்.

## சிறு வணிகர்களுக்கான கடனுதவித் திட்டம்

நாட்டில் உள்ள குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு பல்வேறு அரசு துறைகள் வாயிலாகக் கடனுதவி மற்றும் கடன் உத்தரவாதம் வழங்குவதற்கு அரசாங்கம் 4,000 கோடி வெள்ளி வரை ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் அவர் சொன்னார். குறு மற்றும் அங்காடி வியாபாரிகளுக்கான 170 கோடி வெள்ளி மதிப்புள்ள கடனுதவித் திட்டங்கள் பேங்க் நெகாரா மலேசியா, பி.எஸ்.என். தெக்குன் வாயிலாக வழங்கப் படுகின்றன என்றார் அவர்.

# நாட்டின் கடன் வெ 1.2 டிரில்லியன் வெள்ளி

வசீகரிக்க கூடிய தரவுகளின் வாயிலாக மக்களை திசை திருப்பாமல் உண்மைகளை வெளிப்படுத்தும் நோக்கில் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய அரசாங்கம் முடி வெடுத்ததாகப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

“மடாணி“ எனப்படும் இந்த நாகரீக வரவு செலவுத் திட்டம் பொறுப்புணர்வு கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையிலும் நிச்சயமற்ற உலகப் பொருளாதாரம் உள்ளிட்ட சவால்களை எதிர் கொள்ளும் விதத்தில் அமைந்துள்ளது என்று நிதி அமைச்சருமான அவர் சொன்னார்.நாடு கடந்த காலக் கடன்களைத் தொடர்ந்து சுமந்து வந்துள்ளது. நாட்டின் மொத்தக் கடன் தொகை 1.2 டிரில்லியன் வெள்ளியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 2023 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 விழுக்காடாகும்.

நாட்டின் கடன் மற்றும் அது சார்ந்த பொறுப்புகள் 1.5 டிரில்லியன் வெள்ளியாக அதிகரிக்கும் பட்சத்தில் அதன் மதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 81 விழுக்காடாக உயர்வு காணும். திரும்பச் செலுத்த வேண்டிய கடனுக்காக வட்டித் தொகையும் 4,600 கோடி வெள்ளியாக அதாவது மொத்த வருமானத்தில் 16 விழுக்காடாக இருக்கும். இதுவரை அமல்படுத்தப்பட்டு வரும் 15 விழுக்காட்டை விட இது அதிகமாகும் என்று அவர் தெரிவித்தார்.

# வெ.38,810 கோடி வரவு செலவுத் திட்டத்தை பிரதமர் தாக்கல் செய்தார்

**மலேசியா மடாணி எனப்படும் நாகரீக மலேசியாவின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை பிரதமர் இன்று தாக்கல் செய்தார். இந்த வரவு செலவுத் திட்டத்திற்காக 38 ஆயிரத்து 810 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 28,910 கோடி வெள்ளி நிர்வாகச் செலவினங்களுக்கும் 9,700 கோடி வெள்ளி மேம்பாட்டிற்கும் செலவிடப்படும்.**

**நாகரீக மலேசியா மேம்பாட்டு வடிவமைப்பில் முதல் நடவடிக்கையாக அமையும் இந்த 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மூன்று இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட 12 முன்னெடுப்புகளை உள்ளடக்கியுள்ளது. முதலாவது- நீடித்த பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதுஇரண்டாவது- நம்பிக்கையை மீட்டெடுப்பதற்கு ஏதுவாக அமைப்புகள் மற்றும் நிர்வாக முறையில் சீர்திருத்தம் செய்வது மூன்றாவது- பாகுபாட்டை மிதமாக்குவதற்கு சமூக நீதியை நிலைநிறுத்துதல்.**

## பி.டி.பி.டி.என் கடன்களுக்கு 20 விழுக்காடு கழிவு- மார்ச் முதல் அமல்

தேசிய உயர்கல்வி கடனுதவிக் கழகத்தின் (பி.டி.பி.டி.என்.) கடன் உதவி பெற்றவர்களுக்கு கடனைத் திரும்பச் செலுத்தும் தொகையில் 20 விழுக்காடு வரை கழிவு வழங்கப்படும். இந்த நடைமுறை வரும் மார்ச் ஒன்றாம் தேதி அமலுக்கு வருகிறது.இந்த சலுகை மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் இன்று 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். கடன் பெற்ற மாணவர்களின் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டு மாதம் 1,800 வெள்ளிக்கும் குறைவான வருமானம் பெறுவோர் ஆறு மாதக் காலத்திற்குக் கடனைத் திரும்பச் செலுத்துதல் ஒத்தி வைக்கவும் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் சொன்னார். கடனைத் திரும்பச் செலுத்துதல் ஒத்தி வைப்பதற்கு வரும் மார்ச் மாதம் முதல் தேதி தொடங்கி விண்ணப்பம் செய்யலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பள்ளிகளுக்கு 50,000 மடிக்கணினிகள் வழங்கப்படும்

கல்வி அமைச்சின் கீழுள்ள பள்ளிகள் மற்றும் உயர்கல்வி கூடங்களுக்கு இவ்வாண்டு 50,000 மடிக்கணினிகளை அரசாங்கம் வழங்கும் என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.மாணவர்களை நாட்டிற்குப் பயனுள்ள பிரஜைகளாக ஆக்குவதில் பங்காற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு இந்த மடிக்கணினிகள் வழங்கப்படுவதாக அவர் சொன்னார். இலக்கவியல் தொழில்நுட்பம் மற்றும் நவீனமயத்திற்காக ஆசிரியர்களும் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளதாக மக்களவையில் இன்று 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த போது அவர் குறிப்பிட்டார். கல்வி அமைச்சுக்கு கடந்தாண்டில் 5,260 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்ட வேளையில் இவ்வாண்டு அத்தொகை 5,520 கோடி வெள்ளியாக அதிகரிக்கப்படுகிறது என்றார் அவர்.



## 1967 ஆம் ஆண்டுத் திவால் சட்டத்தில் திருத்தம்

திவாலானவர்கள் இரண்டாம் வாய்ப்பினைப் பெறுவதற்குரிய உரிமையைப் பெற்றுள்ளதால் திவால் அடைந்தவர்கள் குறுகிய காலத்தில் இயல்பாகவே அந்த நிலையில் இருந்து விடுபடுவதற்கு ஏதுவாக 1967ஆம் ஆண்டு திவால் சட்டத்தில் திருத்தம் செய்யப் படவுள்ளது. கடந்த ஜனவரி வரை 260,000 பேர் திவாலாகி உள்ளதாக கூறியப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், அவர்களில் பெரும்பாலானோர் மலாய்க்காரர்கள். நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்காற்ற கூடியவர்கள் என்றும் அவர் சொன்னார். ஐம்பதாயிரம் வெள்ளிக்கும் குறைவான கடன் சம்பந்தப்பட்டவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் வரும் 2023ஆம் மார்ச் 1ஆம் தேதி தொடங்கி உடனடியாகத் திவால் நிலையில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

இந்த சட்டம் திருத்தப்பட்டவுடன் 130,000 பேர் திவால் பிடியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

## அரசு ஊழியர்களுக்கு வெ.700 நோன்புப் பெருநாள் சிறப்பு உதவித் தொகை

ஙி எதிர்வரும் ஏப்ரல் மாதம் கொண்டாட படவிருக்கும் நோன்பு பெருநாளை முன்னிட்டு அரசு துறையில் உள்ள கிரேட் 56, அதற்கு கீழ்ப்பட்ட மற்றும் ஒப்பந்த பணியாளர்களுக்கு 700 வெள்ளி வழங்கப்படும். ஓய்வு பெற்றவர்களுக்கும் 350 வெள்ளி உதவித் தொகையாக வழங்கப்படும் என கூறிய பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அரசு ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை போற்றும் வகையில் இந்த தொகை வழங்கப்படுகிறது என்றார். மக்களவையில் இன்று 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த போது அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

## ஜி.எஸ்.டி. வரி அமல்படுத்தப்படாது

பொருள் சேவை வரியை (ஜி.எஸ்.டி.) மீண்டும் அறிமுகப் படுத்தும் திட்டம் அரசுக்கு இல்லை என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.மக்களில் பெரும்பாலோர் இன்னும் சிரமத்தில் உள்ளனர், உணவு பணவீக்கம் ஐந்து விழுக்காடாக இருப்பது, குறைவான சம்பள விகிதம் ஆகிய சூழல்களை கருத்தில் கொள்கையில் அந்த வரியை விதிப்பதற்கு இது சரியான தருணம் அல்ல என்று 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது அவர் குறிப்பிட்டார்.

## ஆடம்பர பொருட்களுக்கு வரி

ஆற்றல் உள்ளவர்களுக்கு வரி அடிப்படையை விரிவாக்கம் செய்வதற்கான புதிய நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளதாகவும் அவர் சொன்னார். இவ்வாண்டு தொடங்கி ஆடம்பர பொருட்களுக்கு வரியை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கைக்கடிகாரம், அழகு சாதனம் உள்ளிட்ட பொருட்களுக்கு அதன் மதிப்கேற்ப வரி உயர்த்தப்படும் என்றார் அவர்.

## வெள்ளத் தடுப்பு மற்றும் ஜானா விபாவா திட்டங்கள் ரத்து

சுமார் 1,500 கோடி வெள்ளி மதிப்புள்ள வெள்ளத் தடுப்பு திட்டம் மற்றும் 700 கோடி வெள்ளி மதிப்பிலான ஜானா விபாவா திட்டம் உள்பட நேரடி பேரத்தின் மூலம் வழங்கப்பட்ட அனைத்து திட்டங்களும் ரத்து செய்யப்படும். மக்களவையில் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இதனைத் தெரிவித்தார். கூட்டரசு சாலைகளைப் பராமரிப்பது மற்றும் தரம் உயர்த்துவதற்கு 270 கோடி வெள்ளி ஒதுக்கப்படும் என்று அவர் சொன்னார். சிறு திட்டங்களை ஜி 1 முதல் ஜி 4 வரையிலான பிரிவைச் சேர்ந்த சிறு குத்தகையாளர்கள் மேற்கொள்வதற்கு ஏதுவாக 30 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அவர் சொன்னார்.



## கிராம மற்றும் புறநகர்ப் பகுதிகளில் புதிய சாலை

சாலைகள் அமைப்பது மற்றும் நடப்பிலுள்ள சாலைகளை மேம்படுத்துவது ஆகிய பணிகளுக்காக 150 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர பொதுமக்கள் புகாரின் அடிப்படையில் பழுதடைந்த சாலைகளை சீரமைப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 100,000 வெள்ளி வழங்கப்படும்.

## 2023 பட்ஜெட்டில் மின் சிகரெட்டுகளுக்கு கலால் வரி

வேப் எனப்படும் மின் சிகரெட்டுகளில் பயன்படுத்தப்படும் நிக்கோடின் அடங்கிய திரவம் அல்லது களிப்புக்குக் கலால் வரி விதிப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. மக்களையில் இன்று 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இதனைத் தெரிவித்தார்.

## பள்ளிகள் மற்றும் கிளினிக்குகள் மறுசீரமைப்பு

மேலும், மோசமான நிலையில் உள்ள பள்ளிகள் மற்றும் கிளினிக்குகள் மறுசீரமைப்பு செய்யப்படும் என்றும் அவர் சொன்னார். 120 கோடி வெள்ளி ஒதுக்கீட்டில் மோசமான நிலையில் உள்ள 400 கிளினிக்குகள் மற்றும் 380 பள்ளிகளைச் சீரமைக்கும் பணி உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று அவர் சொன்னார். இந்த மறு சீரமைப்புத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பள்ளிகள் மற்றும் கிளினிக்குகளில் மேற்கொள்ளப்படும் குத்தகைப் பணிக்கான விலைப்புள்ளியின் உச்சவரம்பு 500,000 வெள்ளியிலிருந்து 10 லட்சம் வெள்ளியாக உயர்த்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் திட்டம்

சுற்றுலாப் பயணிகள் அதிகம் கூடும் இடங்களைப் பாதிக்கும் நெரிசல் பிரச்சினைகளை சமாளிக்க சுங்கை சிப்பாங்கில் சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்தும். இத்திட்டம் வெ. 160 மில்லியன் செலவில் புக்கிட் பெலண்டோக், போர்ட்டிக்சன் மற்றும் சுங்கை பிலெக், சிப்பாங் ஆகியவற்றை இணைக்கும் வகையில் அமைக்கப்படும் என்று பிரதமர் விளக்கினார்.

ஹுலுவில் இருந்து தனா ரத்தா, கேமரன் ஹைலேண்ட்ஸ், பகாங் வரை வெ. 480 மில்லியன் செலவில் ஒரு புதிய சாலை அமைப்பது உட்பட மற்ற திட்டங்களும் சிக்கலைச் சமாளிக்க செயல்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். “நார்த் யோங் பெங்கில் இருந்து வடக்கு-தெற்கு நெடுஞ்சாலையின் மேம்பாட்டு திட்டமாக வட யோங் பெங்கில் இருந்து வடக்கு செனாய்-கட்டம் 1, ஜொகூர் வரை நான்கு முதல் ஆறு வழித்தடங்கள் வரை 525 மில்லியன் ரிங்கிட் செலவில் கட்டம் கட்டமாக செயல்படுத்த அரசாங்கம் ஒப்புக்கொண்டது,” என்று அவர் 2023 பட்ஜெட்டை தாக்கல் செய்யும் போது கூறினார். மேலும், சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் க்ஷவ. 250 மில்லியனை ஒதுக்கியுள்ளது. இந்த மானியம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வாடகை விமானங்களை (சார்ட்டர்) ஊக்குவிக்கவும் பயன்படுத்தப்படும்,” என்று அவர் கூறினார்.

## My 50 மாதாந்திர பாஸ் திட்டத்தில் 180,000 பேர் பயனடைந்தனர்


பிரசரணாவின் கீழ் ஆல 50 மாதாந்திர பாஸ் திட்டமானது கிள்ளான் பள்ளத்தாக்கில் வசிப்பவர்களின் போக்குவரத்துச் செலவைக் குறைக்கிறது. பிரதமர் பட்ஜெட் 2023 ஐ சமர்பிக்கும் போது, இந்த திட்டத்தில் ரயில் மற்றும் பேருந்து சேவைகளைப் பயன்படுத்தும் கிட்டத்தட்ட 180,000 பேர் பயனடைந்தனர் என்று கூறினார்.

“மேலும், இடைவிடாத பேருந்து சேவையை பயன்படுத்தும் ஜொகூர் பாரு மக்களின் நலனுக்காக, my BAS 50 பாஸ் திட்டம் அறிமுகப் படுத்தப்படும்,‘ என்றார்.

“மலாக்கா, கூச்சிங் மற்றும் கோத்தா கினாபாலு நகரங்களுக்கு இடைவிடாத பேருந்து சேவையை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு அரசாங்கம், க்ஷவ. 150 மில்லியனையும் வழங்கியுள்ளது,” என்று அவர் கூறினார்.

## கொசுக்கள் உற்பத்தி ஆகும் கட்டுமான தளம் மூடப்பட்டது ஷா ஆலம் நகராண்மை கழகம்

ஷா ஆலம்:-
நகராண்மை கழகம் (எம்பிஎஸ்ஏ) பிரிவு U8இல் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் கொசுக்கள் உற்பத்தி செய்யும் இடமாக மாறிய ஒரு கட்டுமான தளத்தை மூடியது. சம்பந்தப்பட்ட இடத்தில் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு, சுத்தம் செய்ய ஒப்பந்ததாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.
“கட்டுமானப் பணிகளை நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மற்றும் ஒப்பந்ததாரர்கள் தொடர்ந்து சுத்தம் மற்றும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது,” என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.
டிங்கி காய்ச்சல் அதிகரிப்புக்கு கட்டுமானப் பகுதிகள் முக்கிய காரணிகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.
“டெவலப்பர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் கட்டுமானப் பகுதிகள் ஏடிஸ் கொசுக்கள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக மாறாமல் இருப்பதை உறுதி செய்வதில் கவனமாக இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் அவர்கள் கொசுக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் வேண்டும்.



## சட்டவிரோதமாக குப்பை கொட்டுவோர் குறித்து தகவல் அளிக்க எம்.பி.கே. வேண்டுகோள்

ஷா ஆலம்:-
சட்டவிரோதமான முறையில் குப்பைகளை கொட்டுவோர் குறித்த தகவல்களை அளிக்கும் படி பொது மக்களை கிள்ளான் நகராண்மைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.
குற்றவாளிகள் பிடிபடும் அளவுக்கு தக்க ஆதாரங்களுடன் புகார்களை அளிப்பவர்களுக்கு வெகுமதி வழங்கப்படும் என்று நகராண்மைக் கழகம் தனது பேஸ்புக் பக்கத்தில் கூறியுள்ளது.
சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டுவோர் தொடர்பான புகைப்படங்கள் அல்லது காணொளிகளை 03-33714404 என்ற எண்களில் பகிர்ந்து கொள்ளலாம் என ஆலோசனை கூறியது.
தகுந்த ஆதாரங்களுடன் குற்றம் புரிந்தவர்கள் பிடிபட்டால் தகவல் அளித்தவர்களுக்கு உரிய வெகுமதி வழங்கப்படும் என்று என நகராண்மைக் கழகம் மேலும் குறிப்பிட்டது.
சுற்றுச்சூழல் துறையின் அமலாக்கத் துறையினர் உள்ளிட்ட 25 குழுக்களை தாங்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தியுள்ளதாக கூறிய நகராண்மைக் கழகம், சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டும் பகுதிகளில் இரகசிய கண்காணிப்பு கேமராவும் பொருத்தப்பட்டுள்ளன என்றது.
இவ்வாண்டில் கிள்ளான் மாநகர் அந்தஸ்தைப் பெறவுள்ளது. குப்பைகளை கண்ட இடங்களில் வீசுவோரைப் பிடிப்பதில் கிள்ளான் நகராண்மைக் கழகத்திற்கு உதவ வாருங்கள். கிள்ளான் சுத்தம் நிறைந்த நகரமாக உருவாக்குவோம் என அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## முதலில் வரி செலுத்துவோருக்கு 2,500 பிரத்யேக(NFC) டச் என் கோ கார்டுகள்

### கோலா லங்காட் நகராண்மை கழகம்

ஷா ஆலம்:-
கோலா லங்காட் நகராண்மை கழகம் (MPKL) முதலில் வரி செலுத்துவோருக்கு 2,500 பிரத்யேக (NFC) டச் என் கோ கார்டுகளை வழங்குகிறது.இந்த சலுகையின் காலம் ஜனவரி 1 முதல் பிப்ரவரி 28 வரை வரையறுக்கப்பட்டுள்ளது என்று நகராண்மை கழகம் தெரிவித்துள்ளது.“கோலா லங்காட் நகராண்மைக் கழகத்தின் அதிர்ஷ்டக் குலுக்குப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை தவறவிடாதீர்கள் மற்றும் ஒரு பிரத்யேக (NFC) டச் என் கோ கார்டு பெறுவதற்கான வாய்ப்பை பெறுங்கள்.“2,500 கார்டுகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றியாளர்களின் பட்டியல் மார்ச் மாதத்தில் அறிவிக்கப்படும்” என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் தகவல்களுக்கு கோலா லங்காட் நகராண்மை கழக வருவாய் பிரிவை 03-3853 0303 நீட்டிப்பு 1213 என்ற எண்ணில் அல்லது 019-471 6755 வாட்சப் மூலமாகத் தொடர்பு கொள்ளலாம்.ஆரம்பகால மின்-பில் பதிவு செய்தவர்கள் மற்றும் வரி செலுத்தியவர்கள் அதிர்ஷ்டக் குலுக்கல் பங்கேற்பதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:

1. மதிப்பீட்டு வரி இ-பில் பதிவு செய்யவும்
2. மதிப்பீட்டு வரி 2023ஆம் ஆண்டு முழுவதுமாகச் செலுத்துதல்
3. கடந்த கால வரி பாக்கிகள் இல்லை




## மதிப்பீட்டு வரியைச் செலுத்துவீர்

### சொத்து உரிமையாளர்களுக்கு எம்.பி.எஸ்.ஏ. வேண்டுகோள்

ஷா ஆலம்:-
ஷா ஆலம் வட்டாரத்தில் உள்ள அனைத்து சொத்து உரிமையாளர்களும் 2023 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்கான மதிப்பீட்டு வரியை பிப்ரவரி 28 க்குள் அல்லது அதற்கு முன் செலுத்துமாறு நினைவூட்டப்படுகின்றனர்.இந்த மதிப்பீட்டு வரியைச் செலுத்துவதற்கு இணையம் உள்ளிட்ட பல்வேறு வழிகளை மாநகர் மன்றம் ஏற்படுத்தியுள்ளதாக அதன்




வர்த்தக மற்றும் பொது உறவு பிரிவுத் தலைவர் ஷாரின் அகமது கூறினார்.வீடுகளில் குப்பைகளை அகற்றவும் சாலைகள், தெரு விளக்குகள், வடிகால்கள் போன்ற பொது உள்கட்டமைப்பை சுத்தம் செய்து பராமரிக்கவும் மேலும் பொதுப் பூங்காக்களை உருவாக்கவும் இந்த வரித் தொகை உதவுகிறது என்று அவர் சொன்னார்.
மாநகரை திறனுடன் நிர்வகிக்கவும் அதன் மூலம் மக்களுக்கு சௌகர்யமான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தவும் சொத்து உரிமையாளர்கள் வழங்கும் இந்த வரி பெரிதும் துணை புரிகிறது என்று அவர் குறிப்பிட்டார். சொத்து உரிமையாளர்கள் www.mymbsa.gov.my , www.pbtpay.kpkt.gov.my , www.maybank2u.com.my , www.rhbgroup.com , www.bankislam.com.my,. www. .cimbclicks.com.my , www.i-muamalat.com.my , www.pbebank.com k‰W« www.cimb-bizchannel.com.my. ஆகிய இணையத் தளங்கள் வாயிலாக கட்டணத்தைச் செலுத்தலாம்.மேலும் JomPAY மூலமாகவும் கட்டணச் சேவை வழங்கப்படுகிறது. இதுதவிர, பணம் செலுத்துபவர் குறியீடு: 7567, Ref-1 இல் உள்ள புதிய கணக்கு எண் மற்றும் Ref-2 இல் உள்ள தொலைபேசி எண்ணை உள்ளிட்டு, பின்னர் கட்டணத் தொகையை செலுத்த வேண்டும்.
ஒவ்வொரு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படும் எம்பிஎஸ்ஏ டிரைவ்-ட்ரூ முகப்பிடத்திலும் மதிப்பீட்டு வரியைச் செலுத்தலாம் என்று அவர் கூறினார்.
இதன் தொடர்பான மேல் விபரங்களுக்கு மாநகர் மன்றத்தின் வருவாய் மேலாண்மைப் பிரிவு அல்லது மாநகர் மன்றத்தின் நிதித்துறையை 03-5510 5133 இணைப்பு 1295, 1522, 1531 , 1656 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## முறைகேடுகளைத் தடுக்க சிறு வணிகர்களின் வர்த்தக லைசென்ஸ் மறு ஆய்வு செய்யப்படும்- ரோட்சியா

ஷா ஆலம்:-
அனைத்து ஊராட்சி மன்றங்களிலும் வழங்கப்பட்டுள்ள சிறு வணிகர்களுக்கான வர்த்தக லைசென்ஸ்களை மாநில அரசு மறு ஆய்வு செய்ய உள்ளது.ஒருவரிடம் பல வர்த்தக லைசென்ஸ்கள் உள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தொழில் முனைவோர் மேம்பாட்டு துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.ஒரு சில தரப்பினரின் ஆதிக்கப் போக்கு காரணமாக மற்ற சிறு வணிகர்களுக்கு லைசென்ஸ் கிடைக்காமல் போகும் சூழலைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் சொன்னார்.மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி மன்றங்களிலும் வழங்கப்பட்டுள்ள 90,000 வர்த்தக லைசென்ஸ் களில் 77 விழுக்காடு ஒரே பெயரில் பதிவு செய்யப்பட்டு மாநிலத்தின் பல்வேறு இடங்களில் செயல்படுவது விசாரணையில் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.
எஞ்சிய 23 விழுக்காடு லைசென்ஸ்கள் ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டு பதிவு பெற்ற ஊராட்சி மன்றப் பகுதியில் வர்த்தகம் மேற்கொள்ளப்படுவது கண்டறியப்பட்டது என்றார் அவர். சில வேளைகளில் ஒருவர் 30 வர்த்தக லைசென்ஸ்கள் வரை வைத்துள்ளார். ஆனால், அத்தனை லைசென்ஸ்களும் ஒரே பெயரில் உள்ளன.



சிலாங்கூர் மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவின் வாயிலாக ஆய்வு செய்த போது அந்த லைசென்ஸ் உரிமையாளர்கள் பல இடங்களில் வர்த்தகம் புரிவது தெரிய வந்துள்ளது என அவர் சொன்னார்.இங்குள்ள டி பல்மா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற டிபியு சென். பெர்ஹாட் நிறுவனத்திற்கும் சிலாங்கூர் மாநில சிறு வர்த்தகர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். ஒருவருக்கு வழங்கப்பட்ட லைசென்சை மற்றவர் பயன்படுத்தும் “அலி பாபா“ முறையின் ஊடுருவலைத் தடுப்பதற்காக இவ்விவகாரம் மீது தீவிர கவனம் செலுத்தும் படி ஊராட்சி மன்றங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

மலேசியாவிலுள்ள ஆலயங்களில் பெரும்பாலானவை தோட்டங்களை முகவரிகளாகக் கொண்டவை. நகர்ப்புற ஆலயங்களில் சில நகரத்தாரால் உருவாக்கப்பட்டவை. எஞ்சியவை அரசாங்க நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் உருவானவை.

இவற்றைத் தாண்டி வேறு வித சூழல்களில் உருவான ஆலயங்கள் சில உண்டு. அவற்றில் ஒன்றுதான் கிள்ளான், ஜாலான் புக்கிட் கெமுனிங் 8 வது மைல் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்.

வழக்கமாக மக்கள் இருக்கும் இடத்தில்தான் ஆலயத்தை உருவாக்குவார்கள். இங்கு சற்று மாறுதலாக ஆலயம் முதலில் கட்டப்பட்டு அதன் பின்னரே சுற்றுவட்டாரங்களில் குடியிருப்புகள் தோன்ற ஆரம்பித்தன.

அது மட்டுமின்றி, மண்டப வசதியுடன் ஆலயத்தை நிர்மாணிக்கும் திட்டத்திற்கு இந்த ஆலயம்தான் முன்னோடியாக இருந்தது என்றால் அது மிகையில்லை. இந்த மாறுபட்ட முயற்சிக்கு இவ் வட்டார முன்னோர்களின் தொலைநோக்கு சிந்தனை தான் காரணம் என்றால் எல்லோருக்கும் வியப்பாக இருக்கும்.

இந்த ஆலயத்தின் வரலாறு குறித்தும் அதன் உருவாக்கத்திற்கு பாடுபட்ட தலைவர்கள் குறித்தும் ஆலயத்தின் அறங்காவலர்களில் ஒருவரான கி.ஜெயராமன் இவ்வாறு விளக்குகிறார்.


அறுபதாம் ஆண்டுகளில் எமரால்டு, மேட்டன், புக்கிட் கெமுனிங், புக்கிட் ரீமாவ், டாமன்சாரா, லபுவான் பாடாங் என சுற்றிலும் தோட்டங்கள் சூழ்ந்திருந்த நிலையில் புக்கிட் கெமுனிங் 8வது மைல் பகுதி மட்டும் தனியாருக்குச் சொந்தமான நிலங்களைக் கொண்டிருந்தது..

தோட்டங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகலாம் என அப்போதே கணித்த இவ் வட்டார சமூகத் தலைவர்களான தலைமையாசிரியர்கள் க.சாமிக்கண்ணு, மாரியப்பன் மற்றும் மு.இராஜமாணிக்கம், கண்ணன் நாயர் போன்றவர்கள் சீனர்கள் வசமிருந்த நிலங்களை இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் என வாங்கி அவற்றை கால் ஏக்கர் எனப் பிரித்து சுற்றுவட்டார மக்கள் வாங்கிக் கொள்வதற்குரிய ஏற்பாட்டைச் செய்தனர்.

அதன் அடிப்படையில் 60 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முதன் முறையாக இரண்டேகால் ஏக்கர் நிலம் வாங்கி ஒன்பது துண்டுகளாக பிரிக்கப்பட்ட போது, சாலையோரம் இருந்த முதல் நிலம் ஆலயத்திற்கு ஒதுக்கப்பட்டு பொதுமக்கள் நன்கொடை மூலம் வாங்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலம் அடுத்தவர் நிலத்தில் ஆலயத்தைக் கட்டி நிலத்திற்கு உரியவர் உடைக்க வரும்போது அதைத் தடுக்க ஆள் திரட்டுவது அல்லது அரசாங்கத்திடம் மனு கொடுப்பது போன்ற அவல நிலை ஏற்படுவது தடுக்கப் பட்டது.

சொந்த நிலத்தைப் பெற்றப் பின்னர் 1970 ஆம் ஆண்டில் அந்த நிலத்தில் ஆலயத்தை அமைக்கும் பணியில் அமரர் சாமிக்கண்ணு தலைமையிலான குழுவினர் தீவிரமாக ஈடுபட்டனர். அப்போது கோலக் கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் டான்ஸ்ரீ வெ.மாணிக்கவாசகம் 25,000 வெள்ளியை அரசு மானியமாக வழங்கிய வேளையில் சுற்றுவட்டார தோட்ட மக்கள் தங்களால் இயன்ற தொகையை ஆலய கட்டிடப் பணிக்கு வழங்கினர்.



# தனித்துவம் கொண்ட புக்கிட் கெமுனிங் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

அழகிய வடிவில் ஆலயமும் அதன் அருகில் சுமார் 150 பேர் அமரும் வசதியுடன் டான்ஸ்ரீ வெ.மாணிக்கவாசகம் பெயரில் மண்டபமும் கட்டப் பட்டன. 1971 ஆம் ஆண்டில் ஆலய கும்பாபிஷேகமும் மண்டப திறப்பு விழாவும் நடைபெற்றன.

அதன் பிறகுதான் இப்பகுதியில் வரிசையாக பலரும் லாட் நிலங்களை வாங்கி குடியேறத் தொடங்கினர். தொடக்கத்தில் இருபதுக்கும் குறைவாக இருந்த இந்தியர்களின் குடியிருப்புகள் 80ஆம் ஆண்டுகளில் 300க்கும் அதிகமாக விரிவாக்கம் கண்டன.

இவ்வட்டார மக்களின் பிரதான வழிபாட்டு தளமாக ஆலயமும் சமூக மையமாக மண்டபமும் விளங்கி வந்த நிலையில் 1997ஆம் ஆண்டில் நடைபெற்ற மூன்றாவது கும்பாபிஷேகத்தின் போது ஆலயம் முழுமையாக புனரமைப்பு செய்யப் பட்டு புதிய தோற்றம் கண்டது. 2015 ஆம் ஆண்டில் மாநில மற்றும் மத்திய அரசின் மானியம் வாயிலாக மண்டபமும் விரிவாக்கப்பட்டு குளிர்சாதன வசதியும் ஏற்படுத்தப்பட்டது.

மாநில மற்றும் மத்திய அரசுகள் வழங்கிய மானியம், மண்டப வாடகை, பொது மக்களின் நன்கொடை மூலம் இந்த ஆலயம் நிர்வாகம் செய்யப்பட்டு வந்துள்ளது. தமிழர் திருநாள், அரசியல் கூட்டங்கள், திருமணம் மற்றும் பல்வேறு சமூக நிகழ்வுகள் நடைபெறும் மையமாக இந்த ஆலய மண்டபம் விளங்கி வந்துள்ளது என்று ஜெயராமன் ஆலய வரலாற்றை விவரித்தார்.

இதனிடையே, கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் வெள்ளப் பேரிடர் காரணமாக ஏற்பட்ட பாதிப்பில் இருந்து ஆலயம் மீண்டும் தற்போது சமய மற்றும் சமூக நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதாக ஆலயத் தலைவர் மகேஸ்வரன் துளசி கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தால் ஆலயத்தில் சமயப் பணிகள் முற்றாக முடங்கின. அதிலிருந்து மீளும் சமயத்தில் கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் ஆலயம் மோசமான பாதிப்பை எதிர்நோக்கியது. இயற்கை பேரிடர் ஏற்படுத்திய இந்த இடர்ப்பாடுகளிலிருந்து மீண்டு தற்போது ஆலயத்தில் வழிபாடுகளும் திருமணம் போன்ற வைபவங்களும் நடைபெறத் தொடங்கியுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

ஆலயத்தின் அடுத்த கும்பாபிஷேகம் அடுத்தாண்டு நடைபெற உள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர ஆலயத்தில் சமயப் பணிகளோடு சமூகப் பணிகளையும் அதிகளவில் மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம் என அவர் சொன்னார்.



# சீபீல்டு தோட்டத் தமிழ்ப்பள்ளி

# நிரந்தர இடம் தேடி நெடும் பயணம்




**இந்நாட்டில் அதிகமானோரால் அதிக முறை உச்சரிக்கப்பட்ட ஒரு தோட்டத்தின் பெயர் எதுவென்றால் அது நிச்சயம் சீபீல்டு தோட்டமாக தான் இருக்கும். அந்த "பிரசித்திக்கு" பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று தோட்டத்து ஆலயம். ஆனால், அத்தோட்டத்திற்கு யாரும் அறியாமல் போன இன்னொரு அடையாளம் உள்ளது. அதுதான் தமிழ்ப்பள்ளி. நிலையான இடம் தேடி நெடும் பயணம் மேற்கொண்ட அப் பள்ளியைப் பற்றி அதிகமானோர் அறிந்து கொள்ளவும் இல்லை. அக்கறை காட்டவும் இல்லை. இதனால், இடம் விட்டு இடம் பெயர்ந்து அடுத்தவர் இடத்தில் அடைக்கலம் புகுந்த இப்பள்ளியின் வலிமிகுந்த வரலாறு பலருக்கு தெரியாமலே போய்விட்டது.**

**சுமார் 100 ஆண்டு கால வரலாற்றில் ஐந்து முறை இட மாற்றம் கண்ட இப்பள்ளி இப்போதுதான் ஆறாவது முறையாக நிரந்தர இடத்தில் தடம் பதிக்கத் தயாராகி வருகிறது. பள்ளியின் பக்கம் பார்வையைத் திருப்புவதற்கு முன்னர், தோட்டத்து வரலாற்று சுவடுகளைப் பின்பற்றிச் சற்று தூரம் நடந்து பார்ப்போம்.**

கிள்ளானையும் பூச்சோங்கையும் இணைக்கும் சாலையில் உள் சீபீல்டு வெளி சீபீல்டு என இரு பிரிவுகளை உள்ளடக்கியிருந்தது இந்தத் தோட்டம். நாகரீகத்தின் வெளிச்சம் படாத நாற்பதாண்டுகளுக்கு முந்தைய காலத்தில் ரப்பர் மரங்களுக்கு மத்தியில் பாம்பு போல் வளைந்தேடும் சாலையில் பயணித்த அனைவருக்கும் இந்தத் தோட்டத்தைப் பற்றி அறிந்திருக்கும் வாய்ப்பு நிச்சயம் உண்டு.

அணிவகுப்பில் விறைப்பாய் நிற்கும் வீரர்களைப் போல் வரிசை பிடித்து நிற்கும் ரப்பர் மரங்கள், பாட்டாளிகளுக்கு மட்டும் தெரிந்த பால் வடியும் மரங்களின் பரிபாஷை, வாகனம் காணாத சாலைகள், மின்சாரம் காணாத வீடுகள். இவைதான் தோட்டத்து வாழ்க்கையின் சுருக்கமான சுயவிலாசம்.

தோட்டமே உலகமாய் உலகமே தோட்டமாய்ச் சில கிலோ மீட்டர்களுக்குள் வாழ்க்கையைச் சுருக்கிக் கொண்ட ஜீவன்களுக்கு அருள் தரும் இடமாக ஆலயங்களும் அறிவு தரும் இடமாகத் தமிழ்ப்பள்ளிகளும் விளங்கின.

மேம்பாட்டு திட்டத்தால் பாட்டாளிகள் அலைக்கழிக்கப்பட்டுத் திசைக்கொருவராக இடம் மாறிப் போனாலும் இடைவிடாத தாக்குதல்களுக்கு மத்தியிலும் விடாப்பிடியாகத் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது தோட்டத்து ஆலயம். ஆனால் அங்கிருந்த தமிழ்ப்பள்ளிக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. இடம் விட்டு இடம் பெயர்ந்த இப்பள்ளி நல்லோரின் முயற்சியால் தற்போது தான் நிரந்தர இடத்தில் நிலை கொள்ளத் தயாராகி வருகிறது.

இந்தச் சீபீல்டு தோட்டத் தமிழ்ப்பள்ளி கடந்த 1921ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது. மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து 1941 ஆம் ஆண்டில் பள்ளி உருமாற்றம் பெற்றது. கடந்த 1974 ஆம் ஆண்டில் புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தில் பள்ளி குடி புகுந்தது.

வளர்ச்சியின் இரும்புக் கரங்கள் ஒவ்வொரு தோட்டத்தையும் கபளீகரம் செய்ய ஆரம்பித்தன. 90ஆம் ஆண்டுகளில் மேம்பாடு நாடு அசுர வேகத்தில் மேம்பாட்டை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தது. இதனால் எல்லாத் தோட்டங்களும் முகவரியை இழந்தன. முழு அடையாளத்தையும் இழந்தன. சீபீல்டு தோட்டமும் சுபாங் ஜெயா யுஎஸ்ஜே. என்ற பெயருடன் நவநாகரீக நகரானது.



வளர்ச்சியின் கோரப்பிடிக்குத் தமிழ்ப்பள்ளி மட்டும் இரையாகமல் இருக்குமா என்ன? பள்ளி இடிக்கப்பட்டது. அதற்கு மாற்றாகச் சுபாங் ஜெயா யு.எஸ்.ஜே. 20 பகுதியில் தேசியப் பள்ளியின் கார் நிறுத்துமிடத்தில் "ப" வடிவில் ஒரு கட்டிடம் கட்டி தரப்பட்டு 1998ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. திடல் உள்ளிட்ட எந்தவொரு அடிப்படை வசதியும் மாணவர்களுக்கு உரியப் பாதுகாப்பும் இல்லாத சூழலில் இப்பள்ளி அமைந்திருந்தது.

இதனால் அங்கு மாணவர்கள் தொடர்ந்து கல்வியைத் தொடர முடியாது என்ற சூழ்நிலை ஏற்பட்ட போது யுஎஸ்ஜே .4 இல் உள்ள தேசிய இடைநிலைப் பள்ளியில் மாணவர்கள் தற்காலிகமாக அடைக்கலம் புகுந்தனர். சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு கடந்த 2001 ஆம் ஆண்டில் மாணவர்கள் மீண்டும் அதே பள்ளிக்குத் திரும்பினர்.

இப்பள்ளிக்கு நிரந்தர இடத்தைப் பெறும் முயற்சியில் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கமும் பள்ளி வாரியமும் தீவிரம் காட்டின. இதன் விளைவாக புத்ரா ஹைட்ஸ் பகுதியில் 5 ஏக்கர் நிலம் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்றது. தலைவர்களின் தொடர் போராட்டம் காரணமாக பள்ளிக்கு மேலும் 1.5 ஏக்கர் நிலம் கிடைக்கப்பெற்று அதன் மொத்தப் பரப்பளவு 6.5 ஏக்கராக உயர்வு கண்டது.

அந்த நிலத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய பள்ளி நிர்மாணிக்கப்பட்ட நிலையில் மாணவர்கள் வெகு விரைவில் அப்பள்ளிக்கு மாற்றலாகவுள்ளனர். மாணவர்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய உகந்த சூழலில் கல்வி கற்பதற்குரிய வாய்ப்பினைப் புதிய பள்ளி வழங்கும் என்று பள்ளியின் தலைமையாசிரியர் எஸ். கோவிந்தசாமி கூறினார்.

இந்தப் புதிய பள்ளியில் 18 வகுப்பறைகளும் ஏழு சிறப்பு அறைகளும் உள்ளதாகக் கூறிய அவர், இதில் 500 முதல் 600 மாணவர்கள் பயில்வதற்குரிய வாய்ப்பு உள்ளதாகக் குறிப்பிட்டார். தற்போது உள்ள பள்ளி ஆறு வகுப்பறைகளை மட்டுமே கொண்டுள்ளது. இப்பள்ளியில் 11 ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் போதிக்கின்றனர். அவர்கள் அனைவரும் பட்டதாரி ஆசிரியர்களாவர். இங்குப் பயிலும் சுமார் 100 மாணவர்களில் 51 விழுக்காட்டினர் குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் சன்வே, யுஎஸ்ஜே, செளஜானா புத்ரா, சுபாங் ஜெயா, கிள்ளான் ஆகிய பகுதிகளிலிருந்து வருகின்றனர் என்றார் அவர்.

இப்பள்ளியின் வளர்ச்சிக்குப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் பள்ளி வாரியத்தின் ஒத்துழைப்பு மிகவும் சிறப்பாக உள்ளது. மாணவர்களின் வளர்ச்சிக்கு கற்றல், கற்பித்தல் மற்றும் புறப்பாட நடவடிக்கைகளில் தீவிரக் கவனம் செலுத்தப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

பள்ளியின் மேம்பாட்டிற்காகவும் அடிப்படை வசதிகளை தரம் உயர்த்துவதற்காகவும் மாநில அரசும் மத்திய அரசும் பல்வேறு வழிகளில் உதவி நல்கி வருகின்றன. குறிப்பாக மாநிலத்தின் அரசின் வருடாந்திர மானியம் மூலம் பள்ளியில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய வாய்ப்பு கிட்டியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

### நிதியமைச்சருக்கு ஊதியமின்றி ஆலோசனை வழங்க

# 5 சிறப்பு ஆலோசகர்கள்

பெட்ரோனாஸ் ஆலோசகர் டான்ஸ்ரீ முகமது ஹசன் மரிக்கான் தலைமையிலான நிதியமைச்சின் சிறப்பு ஆலோசக மன்றத்தின் நியமனம் தொடர்பான அறிவிப்பை பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று வெளியிட்டார்.பொருளாதாரத் துறையில் அனுபவம் வாய்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய இந்த குழுவினர் நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவர் என்று அன்வார் சொன்னார்.

இந்த சிறப்பு ஆலோசக மன்றத்தில் எஃப்.வி.எஸ்.பி. சென். பெர்ஹாட் நிர்வாகத் தலைவர் டத்தோ அகமது புவாட் முகமது அலி, சன்வே பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் டாக்டர் இயா கிம் லியோங், மலாயா பல்கலைக்கழகப் பொருளாதார பேராசிரியர் டாக்டர் ராஜா ராசையா மற்றும் சரவாக் எனர்ஜி பெர்ஹாட் நிறுவனத்தின் தலைவர் டத்தோ அமார் அப்துல் ஹமிட் செபாவி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்த சிறப்பு ஆலோசக மன்றத்தில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து எந்த கட்டணத்தையும் பெற மாட்டார்கள் என்று அன்வார் தெரிவித்தார்.

### இந்திய அரசியல், சமூகத் தலைவர்களுடன்

# பிரதமர் அன்வார் சந்திப்பு

நாட்டிலுள்ள இந்திய அரசியல், சமூகத் தலைவர்கள் மற்றும் பிரதான ஆலயங்களின் பொறுப்பாளர்களுடன் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நேற்று சந்திப்பு நடத்தினார். இங்குள்ள ஸ்ரீ பெட்டாலிங் வில் தேநீர் விருந்துடன் நடத்தப்பட்ட இந்த சந்திப்பில் பக்கத்தான் ஹராப்பான் இந்தியத் தலைவர்களும், பிரதிநிதிகளும் பங்கு கொண்டனர்.இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், இனங்களுக்கிடையிலான கருத்திணக்கமின்மைப் பிரச்சனையை விட பொருளாதாரம் மற்றும் நாட்டை நிர்வகிக்கும் முறை மீது தற்போது அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டை மேம்படுத்துவதற்கு ஒரு குழுவாக செயல்பட ஏதுவாக இன மற்றும் அரசியல் வேறுபாடின்றி அனைத்து நிபுணர்களின் ஆற்றலையும் பெறுவது தமது ஒற்றுமை அரசாங்கத்தின் தலையாய நோக்கமாக உள்ளதாக சொன்னார். முதலில் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்போம். நாட்டின் மீதான நம்பிக்கையும் கௌரவமும் மீட்கப்படுவதை உறுதி செய்வது நமது இலக்காக உள்ளது என்று அவர் தெரிவித்தார். நாடு மீண்டும் எழுச்சி பெற்று மேம்பாட்டு இலக்கை அடைவதற்கு நாட்டில் தற்போது நிலவி வரும் அரசியல் உஷ்ணம் தணிக்கப் பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் நலனுக்காகவும் அதனைப் பாதுகாப்பதற்காகவும் உண்மை மற்றும் நீதியை தற்காப்பதற்குரிய தைரியத்தை இந்நாட்டிலுள்ள இந்திய, சீன, சரவாக் மற்றும் சபா மக்கள் கொண்டிருப்பதே தற்போதைய தேவையாகும் என்றார் அவர்.

நாகரீக மலேசிய கோட்பாட்டிற்கேற்ப நம்பிக்கை, ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பு, அன்பு பாராட்டுவது போன்ற குணங்களை கொண்டிருக்கும் பட்சத்தில் நாடு ஒரு மகத்தான தேசமாக நிச்சயம் எழுச்சி காண முடியும் என்றும் அவர் கூறினார்.

# அமைச்சுகள், அரசு துறைகள்

# செயல் திறனை மேம்படுத்த வேண்டும்



மக்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அம்சத்திலும் தங்களின் செயல் திறனை மேம்படுத்துமாறு அனைத்து அமைச்சுகள் மற்றும் அரசு துறைகளைப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் வலியுறுத்தினார். நடைபெற்ற பிப்ரவரி மாதத்திற்கான பிரதமர் துறை ஊழியர்களுடனான மாதாந்திரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், நாட்டின் நிர்வாகத்தின் கண்ணியத்தை உயர்ந்த குறிப்பாகப் பாராட்டத்தக்க நிலைக்கு உயர்த்துவதே தற்போதைய சவால் என்று கூறினார்.

தலைவர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் தங்கள் கடமைகளை நேர்மையாக மேற்கொண்டால் அனைத்து வகையான அடக்குமுறைகளில் இருந்தும் மக்களை விடுவிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். தலைவர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் விசுவாசம் மக்களை அனைத்து வகையான அடக்கு முறைகளிலிருந்தும் விடுவிக்கும். தங்கள் அடிப்படை உரிமைகள் புறக்கணிக்கப்படும் அளவுக்கு மக்கள் ஏமாற்றப் பட்டுள்ளனர் என்றார். அமலாக்கத்துறையில் இன்னும் அலட்சியம் இருப்பதாக கூறிய அவர் அதை உடனடியாக சரி செய்ய வேண்டும் என்றார். எந்தவொரு உரிமத்தையும் (லைசென்ஸ்) பெறுவதற்கு நீங்கள் மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டும் என்கிற நிலை நீடிக்கிறது என்றால் என்னைப் பொறுத்தவரை அதை சரிசெய்ய வேண்டும் என்று அன்வார் மேலும் சொன்னார்.

### தடுப்பூசி கொள்முதல் மீது நாடாளுமன்றத்தில் வெள்ளை அறிக்கை.

விதிமுறைகளுக்கு புறம்பான முறையில் கோவிட்-19 தடுப்பூசி கொள்முதல் செய்யப்பட்டது மற்றும் அதற்கான செலவினம் தொடர்பான வெள்ளை அறிக்கை வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும். அந்த தடுப்பூசிகளை சட்டத் துறை தலைவரின் ஒப்புதல் இன்றி அப்போதைய சுகாதார அமைச்சர் கொள்முதல் செய்துள்ளதாகப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார். இந்த வெள்ளை அறிக்கையை சுகாதார அமைச்சர் டாக்டர் ஜலிஹா முஸ்தாபா நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும் போது இவ்விவகாரம் தொடர்பாக துல்லியமான விபரங்களை வெளியிடுவார் என்று அவர் இன்று அமைச்சரவைக்குப் பின் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

முறையான விதிமுறைகள் அல்லது நடைமுறையைப் பின்பற்றி இந்த கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப் படாதக் காரணத்தால் நிதி விரயம் ஏற்பட்டுள்ளது கண்டறியப் பட்டதைத் தொடர்ந்து இந்த வெள்ளை அறிக்கை வெளியிடப்படுகிறது. சில தடுப்பூசிகளின் எண்ணிக்கை மற்றும் செலவுத் தொகை சந்தேகத்திற்கு இடமான வகையில் உள்ளன என்றார் அவர்.

எனினும், இந்த குளறுபடிக்கு எந்த அமைச்சர் பதிலளிக்க வேண்டும் என்று அன்வார் குறிப்பிடவில்லை. ஆயினும், இதில் சம்பந்தப்பட்ட அமைச்சர் யார் என்பது முக்கியமல்ல. ஆனால் இதில் தொடர்புடைய அனைவரும் முறையான விளக்கத்தையும் பதிலையும் அளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.இதற்கு முன்னர், அமைச்சு நிலையில் தடுப்பூசிகளைக் கொள்முதல் செய்வதற்கான அதிகாரத்தைச் சுகாதார அமைச்சு மற்றும் அறிவியல், தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் துறை அமைச்சுக்கு நிதியமைச்சு வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### இ.பி.எஃப் சேமிப்பை மீட்காமல் மக்களின்

### சுமையைக் குறைக்கும் வழியை, அரசு ஆராய்கிறது.

ஊழியர் சேம நிதியிலிருந்து (இ.பி.எஃப்.) பணத்தை மீட்காமல் மக்கள் எதிர்நோக்கும் நிதிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.அரசாங்கத்தின் அந்த திட்டம் இ.பி.எஃப். சந்தாதாரர்களின் ஓய்வு காலச் சேமிப்புக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.இது குறித்து நாங்கள் ஏற்கனவே விளக்கி விட்டோம். ஏற்கனவே சேமிப்பிலிருந்து நிறைய தொகையை மீட்டு விட்டோம். இப்போது 10,000 வெள்ளி, 5,000 வெள்ளிதான் எஞ்சியிருக்கிறது. எஞ்சிய 10,000 அல்லது 5,000 வெள்ளியையும் மீட்டு விட்டால் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஓய்வு பெறும் போது என்ன செய்யக் போகிறோம் என அவர் கேள்வி எழுப்பினார்.ஐம்பத்தைந்துக்கும் குறைவான வயதுடைய ஊழியர் சேமநிதி வாரிய (இ.பி.எப்.) உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அல்லது 71 விழுக்காட்டினர் ஓய்வு பெறும் போது போதுமான அளவு பணம் இல்லாதவர்களாக அல்லது வறுமைக் கோட்டில் வசிப்பவர்களாக உள்ளனர்.ஐம்பத்தைந்து வயதில் ஓய்வு பெறும் போது சேமிப்பில் இருப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையான 240,000 வெள்ளியை வைத்திருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த 2020இல் 36 விழுக்காடாக இருந்த வேளையில் கடந்தாண்டு இறுதியில் இந்த எண்ணிக்கை 29 விழுக்காடாகக் குறைந்துள்ளது எனப் பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தெரிவித்தார். பெருந்தொற்று காலத்தில் மீட்டப் பணத்தை ஈடு செய்வதற்காக இ.பி.எப். உறுப்பினர்கள் மேலும் நான்கு முதல் ஆறாண்டுகள் வரை வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று நிதியமைச்சருமான அவர் சொன்னார். சிலாங்கூர் பல்கலைக்கழகத்தின் பெஸ்தாரி ஜெயா வளாகத்தில் இன்று நடைபெற்ற சித்திக் பாட்சில் விரிவுரை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.பணி ஓய்வுக்குப் பின்னர் மக்களுக்கு சுமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சேம நிதியை மீட்பதற்கான அனுமதி வழங்குவது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

# மாநில அரசின் மலிவு விற்பனை, மத்திய அரசின் ரஹ்மா விற்பனை ஒருங்கிணைக்கப்படும் – மந்திரி புசார்

பெட்டாலிங் ஜெயா:-

மக்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் தற்போது அமல் செய்யப்பட்டு வரும் ஜெலாஜா ஏசான் ராக்யாட் 2.0 மலிவு விற்பனைத் திட்டம் மற்றும் மத்திய அரசின் ரஹ்மா விற்பனைத் திட்டம் ஆகியவை ஒருங்கிணைக்கப்படும்.

தங்களுக்குத் தேவையான பொருட்களை அதிக அளவிலான மக்கள் வாங்குவதற்கு ஏதுவாக அத்தியாவசிய உணவுப் பொருள் மலிவு விற்பனை நடைபெறும் இடங்கள் அதிகரிக்கப்படும் என்று அவர் சொன்னார்.



ரஹ்மா விற்பனைத் திட்டத்தை மாநில அரசு வரவேற்கிறது. இந்த விற்பனையுடன் அத்தியாவசிய உணவுப் பொருள் விற்பனையையும் ஒருங்கிணைப்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம் என்று அவர் தெரிவித்தார்.ஒன்றாக நடத்த முடியாத பட்சத்தில் அவற்றை தனித்தனியாக பிரிப்போம். இதன் மூலம் அதிக இடங்களில் மேலும் அதிக எண்ணிக்கையிலானோர் பயன் பெறுவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என்றார் அவர்.

மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் துணை நிறுவன கல்வி உபகாரச் சம்பளம் பெறுவோருடன் நடத்தப்பட்ட விருந்து நிகழ்வில் கலந்து கொண்டப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.அத்தியாவசிய உணவுப் பொருள்களை மலிவான விலையில் விற்க வகை செய்யும் இந்த ரஹ்மா விற்பனைத் திட்டத்தை உள்நாட்டு வர்த்தக மற்றும் வாழ்க்கைச் செலவின அமைச்சு ஏற்று நடத்தி வருகிறது.

அதே சமயம் சிலாங்கூர் மக்களின் சுமையைக் குறைக்கும் நோக்கில் மாநில அரசு மாநில விவசாய மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மலிவு விற்பனைத் திட்டத்தை கடந்த ஜனவரி 16ஆம் தேதி முதல் மூன்று மாதங்களுக்கு நடத்துகிறது.

# சிலாங்கூரில் நதிகள் பாதுகாப்புத் திட்டத்துக்காக 20 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டது




ஷா ஆலம்:-

கடந்த ஆண்டு சிலாங்கூரில் நதிகள் பாதுகாப்புத் திட்டத்துக்காக மொத்தம் 20 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கப்பட்டது என்று இயற்கை வள அமைச்சர் கூறினார்.12வது மலேசியா திட்டத்தின் கீழ் இந்த தொகையானது மாநிலத்தில் வெள்ள அபாயத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று நிக் நஸ்மி நிக் அமாட் கூறினார்.சிலாங்கூர் நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் துறை (JPS), மேரு, செமந்தா மற்றும் செலாட் கிள்ளான் தொகுதிகளில் ஐந்து குறுகிய காலத் தணிப்பு திட்டங்களைச் செயல்படுத்த கிட்டத்தட்ட RM1.4 மில்லியன் செலவிட்டதாக அவர் விளக்கினார்.“ஜேபிஎஸ், சுங்கை காப்பார் கெச்சில் மற்றும் சுங்கை காப்பார் பெசாரில் வெள்ளத் தணிப்பு திட்டங்களை மத்திய முகமையின் ஒப்புதலுக்கு உட்பட்டு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

“காப்பாரில் இந்த வெள்ளத் தணிப்புத் திட்டத்தின் நோக்கம் நீர் பிடிப்பு குளம் அமைப்பதை உள்ளடக்கியது. இந்தத் திட்டத்தால் வெள்ளப் பிரச்னையை ஒட்டுமொத்தமாகச் சமாளிக்க முடியும் என்று நம்புகிறோம்” என இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.நான்கு வெள்ளத் தணிப்புத் திட்டங்களைச் செயல்படுத்த மாநில அரசு மொத்தம் RM67.5 மில்லியனை ஜேபிஎஸ்க்கு வழங்கியுள்ளதாகச் செத்தியவங்சா நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் கூறினார்.இதற்கிடையில், நிக் நஸ்மி கூறுகையில், ஜேபிஎஸ் நில அரிப்பு கட்டுப்பாட்டு திட்டத்தையும் செயல்படுத்தியது மற்றும் கடல் நீர் பெருக்குதல் பிரச்சனையை சமாளிக்க சுங்கை காஜாங், தஞ்சோங் கராங்கில் அணையையும் வலுப்படுத்தியது எனக் குறிப்பிட்டார்.“இந்த திட்டத்தில் கட்டுமானப் பணிகள் மற்றும் இரண்டு கிலோமீட்டர் பான் கடற்கரையை உயர்த்துவது ஆகியவை அடங்கும். இது இப்போது வடிவமைப்பை முடிவு செய்யும் இறுதி கட்டத்தில் உள்ளது மற்றும் இந்த ஜூலை மாதம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது,” என்று அவர் கூறினார்.

# உலு லங்காட்டில் இரண்டு புதிய பள்ளிகள்



ஷா ஆலம்:-

11வது மலேசியத் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு புதிய பள்ளிகளின் கட்டுமான பணிகள் முடிவடைந்த பிறகு, உலு லங்காட்டில் மாணவர்கள் நெரிசல் பிரச்சனையைச் சமாளிக்க முடியும் என்று கல்வி அமைச்சர் கூறினார்.தாமான் பிளாங்கி, செமினி தேசியப் பள்ளி இன்னும் கட்டுமானத்தில் இருப்பதாகவும் தாமான் சுத்ரா, காஜாங் தேசியப் பள்ளி கட்டுமானத்திற்கு முந்தைய கட்டத்தில் இருப்பதாகவும் பட்லினா சிடேக் கூறினார்.“மேலும், உலு லங்காட்டில் உள்ள கன்தான் பெர்மாய் தேசியப் பள்ளியில் ஆறு வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டத்திற்கு விண்ணப்பிக்கவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது என்றார். “இருப்பினும், இது தற்போதைய நிதி நிலையைப் பொறுத்தது. இந்த கட்டுமானத்தின் மூலம், உலு லங்காட்டில் மாணவர்களின் நெரிசல் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,” என்று அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.முன்னதாக, பாராளுமன்றத்தில் சில பள்ளிகளின் கட்டுமான நிலை குறித்து உலு லங்காட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சானி ஹம்சான் விளக்கம் கேட்டார். அதற்கு விளக்கம் தரும் வகையில் கல்வி அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

# 2030ஆம் ஆண்டுக்குள் ஹைட்ரோஜன் பஸ்களை பயன்படுத்த சிலாங்கூர் திட்டம்

அம்பாங் ஜெயா:-

அடுத்த ஐந்தாண்டுகளில் அல்லது 2030ஆம் ஆண்டுக்குள் ஹைட்ரோஜன் பஸ்களை பயன்படுத்துவது குறித்து சிலாங்கூர் அரசு ஆராய்ந்து வருகிறது.

இந்த ஹைட்ரோஜன் பஸ்கள் சுற்றுச்சூழலுக்கு நட்புறவானது என்பதோடு பெட்ரோல் வாகனங்களைப் போல் புகையும் வெளியிடாது. மேலும் மின்சார பஸ்களை விட அதிக சக்தியும் கொண்டது என்று சுற்றுச்சூழல் துறைக்கான மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் கூறினார்.

கார்பன் வெளியேற்றத்தை வரும் 2030ஆம் ஆண்டுக்குள் 45 விழுக்காடாகவும் வரும் 2050 ஆம் ஆண்டுக்குள் சுழியம் விழுக்காடாகவும் குறைக்கும் மாநில அரசின் திட்டத்திற்கு ஏற்ப இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று ஹீ லோய் சியான தெரிவித்தார்.

அம்பாங் ஜெயா நகராண்மைக் கழக நிலையிலான சுற்றுச்சூழல் தினத்தை இங்குள்ள மெனாரா



எம்.பி.ஏ.ஜே.வில் நேற்றிரவு தொடக்கி வைத்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் கூறினார்.

எனினும், அதிக அளவில் ஹைட்ரோஜனை பெறுவது மற்றும் வெளிநாடுகளிலிருந்து அதனை இறக்குமதி செய்வது போன்றவை இத்திட்ட அமலாக்கத்தில் மாநில அரசு எதிர்கொள்ளும் சிக்கல்களாக உள்ளதாக அவர் சொன்னார்.ஹைட்ரோஜன் பஸ்களை பயன்படுத்துவதற்கு முன்னர் ஹைட்ரோஜன் தயாரிப்பை உறுதி செய்ய வேண்டும். வாகனங்களுக்கு பயன்படுத்தும் அளவுக்கு அதிக அளவில் ஹைட்ரோஜனைத் தயாரிக்கும் ஆற்றலை இன்னும் நாம் எட்டவில்லை என்றார் அவர்.மற்ற நாடுகள் ஹைட்ரோஜன் தயாரிப்பில் ஈடுபட தொடங்கி விட்டன. சரவாக் மாநிலம் கூட இந்த விஷயத்தில் முன்னிலையில் உள்ளதோடு சிங்கப்பூருக்கும் அந்த எரிபொருளை அது ஏற்றுமதி செய்யவுள்ளது.

ஹைட்ரோஜன் பஸ் களுக்குத் தேவையான ஹைட்ரோஜனை தயாரிப்பதில் கொரியா போன்ற நாடுகளின் ஒத்துழைப்பை நாட நாம் முடிவு செய்துள்ளோம் என அவர் குறிப்பிட்டார். போக்குவரத்து துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால் மாநிலத்தில் ஹைட்ரோஜன் பஸ்களை பயன்படுத்துவது மத்திய அரசின் முடிவைப் பொறுத்ததாகும் என்று அவர் தெரிவித்தார்.

# ஷா ஆலம் அரங்கின் கட்டுமானச் செலவினம் அடுத்த மாதம் தொடக்கத்திற்குள் அறிவிக்கப்படும்

ஷா ஆலம்:-

ஷா ஆலம் அரங்கின் கட்டுமானச் செலவினம் தொடர்பான துல்லியமான தகவல் இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் வழங்கப்படும்.

தற்போது இங்கு நடைபெற்று வரும் அந்த அரங்கம் தொடர்பான கண்காட்சி மற்றும் பொது மக்களின் கருத்தறியும் நிகழ்வு வரும் பிப்ரவரி 10ஆம் தேதியுடன் முடிவுக்கு வந்தவுடன் அந்த விபரங்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

இந்த அரங்கின் கட்டுமானச் செலவினத்தை மதிப்பிடும் நிபுணர்கள் நம்மிடம் உள்ளனர். அரங்கை மட்டும் நிர்மாணிப்பதாக இருந்தால் அதற்கு 70 கோடி முதல் 80 கோடி வெள்ளி வரை தேவைப்படும். ஆனால் நாம் ஒட்டுமொத்த விளையாட்டுத் தொகுதியையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.



பூங்கா, சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு வசதிகளோடு ஹோட்டலையும் நிர்மாணிக்கவிருக்கிறோம். ஆகவே அதற்கான செலவு சற்று அதிகமாகவே இருக்கும் என்றார் அவர்.

அரங்குடன் மற்றொரு அரங்கை ஒப்பிட்டு பார்த்தால் இதன் நிர்மாணிப்புச் செலவினம் 70 கோடி வெள்ளிக்கும் அதிகமாகவும் 100 கோடி வெள்ளிக்கும் குறைவாகவும் இருக்கும் என்று அவர் மேலும் சொன்னார். ஷா ஆலம் அரங்கின் மறுநிர்மாணிப்புக்கு 70 கோடி வெள்ளி செலவு ஆகும் என்ற கூற்று சற்றும் பொருத்தமற்றதாக உள்ளது என்று ஜொகூர் டாருள் தாக்ஸிம் கால்பந்து குழுவின் உரிமையாளர் துங்கு இஸ்மாயில் சுல்தான் இப்ராஹிமின் கூறியிருந்தது தொடர்பில் அமிருடின் இவ்வாறு கருத்துரைத்தார்.இந்த திட்ட மேம்பாட்டாளரான மலேசியான் ரிசோர்சஸ் கார்ப்ரேஷன் பெர்ஹாட் (எம்.ஆர்.சி.பி) நிறுவனத்துடன் மாநில அரசு மாற்றிக் கொள்ளவிருக்கும் நிலம் தொடர்பான விபரங்களையும் தாம் அப்போது அறிவிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். விளையாட்டரங்கின் அருகிலுள்ள பயன்படுத்தப்படாத நிலத்தை அந்நிறுவனத்துடன் மாற்றிக் கொள்வது தொடக்கக் கட்டத் திட்டமாக இருந்தது. எனினும், தற்போது அந்த திட்டத்தில் சிறிது மாற்றம் செய்துள்ளோம். எம்.ஆர்.சி.பி. நிறுவனம் தனது சொந்த செலவில் முழு திட்டத்தையும் மேற்கொள்ளும். அதன் பின்னர் அந்த செலவுத் தொகையை நாங்கள் ஈடுசெய்வோம் என்றார் அவர்.

# விளையாட்டு துறையை மேம்படுத்த 2023 பட்ஜெட்டில் வெ.324 மில்லியன் ஒதுக்கீடு

கோலாலம்பூர்:-

தேசிய விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மற்றும் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் 2023 பட்ஜெட்டில் வெ.324 மில்லியன் ஒதுக்கியுள்ளது.பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், விரிவான விளையாட்டு சூழலை உருவாக்கவும், நாடு முழுவதும் உள்ள விளையாட்டு வசதிகளை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காகவும் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

விளையாட்டு வீரர்களின் நலனைப் பாதுகாக்கவும் இந்த ஆண்டு முதல் தேசிய யாயாசான் கெபாஜிகான் அறக்கட்டளைக்கு (YAKEB) 5 மில்லியன் ரிங்கிட் வழங்கப்படும் என்றார்.

“அதே நேரத்தில், முன்னாள் தேசிய விளையாட்டு வீரர்களை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகளுக்கு வரி விலக்கு அளிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது,” என்றார்.

அடிப்படை அளவில் விளையாட்டு மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தும் இலாப நோக்கமற்ற நிறுவனங்களுக்குப் பங்களிக்கும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு மொத்த வருமானத்தில் 10 சதவீதம் வரை வரி விலக்கு அளிக்க அரசு ஒப்புக் கொண்டதாகப் பிரதமர் கூறினார்.



மேலும், பள்ளி மற்றும் சமூக அளவில் விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்காக 20 மில்லியன் ரிங்கிட் வழங்கப்படும்.

இதற்கிடையில், உள்ளூர் கலைப் பொருட்கள் சந்தைப்படுத்துதல் தீவிரப்படுத்துவது மேலும் ஆக்கப்பூர்வமான படைப்புகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் டிஜிட்டல் உள்ளடக்க நிதியாக வெ.102 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்றார்.

“உள்ளூர் எழுத்தாளர்களின் உயர்தர வெளியீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் 20 மில்லியன் ரிங்கிட் வழங்கப்படுகிறது,” என்றார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof
Hafiz Othaman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat, No.1, Jalan Indah 14/8, Seksyen 14, 40000 Shah Alam, Selangor**

*Tel : 03-55234856*
*Faks: 03-55235856*
*Email : info@mediaselangor.com*

# 12 வயதுக்கும் கீழ்ப்பட்ட மாணவர்களுக்கான கால்பந்துப் போட்டி- ஹைலண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி வெற்றி



கிள்ளான்:-


பன்னிரண்டு வயதுக்கும் கீழ்ப்பட்ட மாணவர்களுக்கான ஒன்பதின்மர் கால்பந்துப் போட்டி கடந்த வாரம் இங்கு நடைபெற்றது. தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் சிலாங்கூர் இந்தியச் சமூகத் தலைவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஐந்து பள்ளிகளைச் சேர்ந்த எட்டு குழுக்கள் கலந்து கொண்டன.

வலம்புரோசா, சிம்பாங் லீமா, ஹைலண்ட்ஸ், மெதடிஸ்ட் காப்பார், தாமான் செந்தோசா ஆகியவையே இப்போட்டியில் பங்கு கொண்ட பள்ளிகளாகும். இப்போட்டியில் கிள்ளான், ஹைலண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி முதல் இடத்தைப் பிடித்த வேளையில் தாமான் செந்தோசா தமிழ்ப்பள்ளி இரண்டாம் இடத்தையும் மெதடிஸ்ட் காப்பார் பள்ளி மூன்றாம் இடத்தையும் பிடித்தன. செந்தோசா சட்டமன்ற உறுப்பினரும் இந்தியச் சமூகத்திற்கான மந்திரி புசாரின் சிறப்பு பிரதிநிதியுமான டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் இந்த விளையாட்டுப் போட்டிக்குத் தலைமையேற்று வெற்றியாளர் களுக்குப் பரிசுகளை எடுத்து வழங்கினார். கால்பந்துப் போட்டியில் சிறந்து விளங்கும் இளம் விளையாட்டா ளர்களை அடையாளம் காணவும் இளையோர் மத்தியில் விளையாட்டு மீதான ஆர்வத்தை ஏற்படுத்தவும் இப்போட்டி நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

# ரஹ்மா கருணை நிதி உதவி வருடத்திற்கு 4 முறை வழங்கப்படும்

கோலாலம்பூர்:- RM1.67 பில்லியன் மதிப்புள்ள 8.7 மில்லியன் B40 குழுவிற்கு ரஹ்மா பணப் பங்களிப்பின் (STR) கட்டம் 1 செலுத்துதல், முன்னைய சமூக நலத்துறை தரவுகளின் அடிப்படையில் STR தளத்தில் பதிவு செய்யப்பட்ட பெறுநரின் வங்கிக் கணக்கில் ஜனவரி 17 முதல் படிப்படியாக வரவு வைக்கப்படும். ரஹ்மா கருணை நிதி உதவி வருடத்திற்கு 4 முறை வழங்கப்படும் மற்றும் பணம் செலுத்தும் தேதி அவ்வப்போது அறிவிக்கப்படும். வங்கிக் கணக்கு இல்லாத பெறுநர்கள் எந்தப் பிஎஸ்என் வங்கி கிளையிலும் அப்பண உதவியைக் கோரலாம்.

இத்திட்டத்தில் குடும்பம் தவிர்த்து, 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள், 21 வயது முதல் 59 வயது வரை கொண்ட தனிநபர் பிரிவினர் மற்றும் 19 வயது முதல் 59 வயது வரையான உடல் ஊனமுற்றவர்களுக்கும் உதவி உண்டு. பி.கே.எம் (BKM) உதவி பெறுநர்கள் இறந்ததை உறுதி செய்யும் சான்றிதழ் மூலம் அவர்களின் கணவன் அல்லது மனைவி ரஹமா கருணை நிதி உதவி கட்டடத்திற்க்கான பணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.



SUMBANGAN TUNAI RAHMAH (STR) FASA 1 BERNILAI RM1.67 BILION

SECARA BERPERINGKAT MULAI 17 JANUARI 2023 (SELASA)

| KATEGORI PENERIMA | JUMLAH PENERIMA | KADAR STR FASA 1 | IMPLIKASI KEWANGAN (RM BILION) |
| --- | --- | --- | --- |
| ISI RUMAH | 4.0 JUTA | RM300 | 1.20 |
| WARGA EMAS TIADA PASANGAN | 1.2 JUTA | RM100 | 0.12 |
| BUJANG | 3.5 JUTA | RM100 | 0.35 |
| JUMLAH | 8.7 JUTA | - | RM1.67 BILION |

Pembayaran STR Fasa 1 akan dikreditkan ke dalam akaun bank penerima yang berdaftar di dalam pangkalan data STR.

Penerima STR yang tiada akaun bank juga boleh membuat penunaian di Cawangan Bank Simpanan Nasional (BSN) mulai 17 Januari 2023.

இந்த நிதி உதவிக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை. ரஹ்மா கருணை நிதி உதவி கட்டம் 1 மற்றும் 2க்கான பெறுநர்களின் தகவல்களைப் பி.கே.எம் எனப்படும் சமூக நலன் இலாக்கா (BKM) 2022யிலிருந்தும் கட்டம் 3 மற்றும் 4க்கான பெறுநர்களின் தகவல்களைப் பி.கே.எம் (BKM) 2023 லிருந்தும் பெறப்படும்.

ரஹ்மா திட்டத்தின் மற்றொரு பகுதி தேர்ந்தெடுக்கப் பட்ட உணவகங்களில் உணவைக் குறைவான விலையில் வாங்குவது மற்றும் Jualan Rahmah- என்ற ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் வெ 100 மில்லியன் அடிப்படைத் தேவைகளைச் சந்தை மதிப்பை விட 30% குறைவான விலைக்கு விற்பனை செய்யும் திட்டத்தையும் கொண்டுள்ளது. இது தொடர்பான கூடுதல் தகவல்களை https://bantuantunnai.hasil.gov.அல என்ற இணைப்பின் மூலம் STR இன் அதிகாரப்பூர்வப் போர்ட்டலில் பெறலாம்.

# சுகாதார அமைச்சகம் (கேகேஎம்) கூடுதல் சுகாதார வசதிகளை உருவாக்க வேண்டும்

## - டத்தோஸ்ரீ மந்திரி புசார்



ஷா ஆலம்:- டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அவர்கள் சிலாங்கூர் சுல்தான் ஷராவுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்களின் உத்தரவைக் கவனத்தில் கொண்டு சுகாதார அமைச்சகத்திடம் (கேகேஎம்) கூடுதல் சுகாதார வசதிகளை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டார்.``இன்னும் சில வாரங்களில் சைபர் ஜெயா மருத்துவமனை முழுமையாக கட்டி முடிக்கப்படும். மத்திய அரசு காப்பார், கிள்ளான் பகுதியில் 300 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையைக் கட்ட முடிவெடுத்துள்ளது. ``மேலும் சிப்பாங்கில் மற்றொரு மருத்துவமனையை கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் மாநிலத்தில் இருக்கும் மருத்துவமனைகள் மீதான அழுத்தத்தைக் குறைக்க முடியும்,'' என்று அவர் கூறினார். சுல்தான் ஷராவுடின் சிலாங்கூரில் உள்ள பொது சுகாதார வசதிகளின் அனைத்துத் தேவைகளையும் விரிவாக மறுபரிசீலனைச் செய்யுமாறு சுகாதார அமைச்சகத்திற்கு அழைப்பு விடுத்தது குறிப்பிடத்தக்கது

# பண்டோரா பேப்பர்ஸ்: எஸ்.பி.ஆர்.எம். விசாரணையை இரட்டிப்பாக்க வேண்டும்



ஷா ஆலம்:- செல்வாக்கு பெற்ற நபர்கள் அயல் நாடுகளில் சேமிப்பு கணக்கை வைத்துள்ளதாக கூறும் பண்டோரா பேப்பர்ஸ் விவகாரத்தை விசாரிக்கும் முயற்சியை எஸ்.பி.ஆர்.எம் எனப்படும் ஊழல் தடுப்பு ஆணையம் இரட்டிப்பாக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணம் சட்டப்பூர்வமான முறையில் பெறப்பட்டதா? அல்லது சட்டவிரோதமாகப் பெறப்பட்டதா? என்பதை கண்டறிய இந்த விசாரணை அவசியம் என்று பக்கத்தான் ஹராப்பான் கூறியது. எனினும், இவ்விவகாரத்தில் முக்கிய ஆவணங்களை பெறும் ஆற்றலை அந்த ஆணையம் கொண்டிராததோடு விசாரணை நடத்துவதற்கான விஷேச ஆற்றலையும் வளங்களையும் கொண்டிராத எதிர்க்கட்சித் தலைவரிடம் ஆவணங்களை கேட்பது ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று அது தெரிவித்தது. சட்டவிரோத பண பரிமாற்றம் தொடர்பில் பண்டோரா பேப்பர்ஸ் அம்பலப்படுத்திய விவகாரம் தொடர்பில் விவாதிப்பதற்கு எதிர்க் கட்சித் தலைவர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கடந்த 4 ஆம் தேதி கொண்டு வந்த தீர்மானத்தை நாடாளுமன்றம் தள்ளுபடி செய்தது.

# 2023 பட்ஜெட்- மித்ராவுக்கு வெ.10 கோடி, தெக்குன் திட்டத்திற்கு வெ.3 கோடி

கோலாலம்பூர்:- மித்ரா எனப்படும் மலேசிய இந்திய சமூகப் பொருளாதார உருமாற்றத் திட்டத்திற்கு 2023ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 10 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர இந்தியச் சமூகத்தைச் சேர்ந்த தொழில்முனைவோரை இலக்காகக் கொண்ட தெக்குன் வர்த்தக கடனுதவித் திட்டத்திற்கு 3 கோடி வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களின் மேம்பாட்டிற்காக இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் முதன் முறையாக 5 கோடி வெள்ளி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபரங்களை மனிதவள அமைச்சர் வீ.சிவக்குமார் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அறிவித்தார். பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தப் பட்ஜெட் அனைத்து இன மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் ஒரு வரவு செலவுத் திட்டமாகும் என அவர் வர்ணித்தார்.





# இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கு 50 மில்லியன்

இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களின் மேம்பாட்டிற்காக இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் முதன் முறையாக 5 கோடி வெள்ளி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபரங்களை மனிதவள அமைச்சர் வீ.சிவக்குமார் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த பட்ஜெட் அனைத்து இன மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் ஒரு வரவு செலவுத் திட்டம் ஆகும் என அவர் வர்ணித்தார்.